விலை | தனி ஒரு பிரதி 
KUDI ARASU. Reg. No. M. 2041

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா ஆறு மாசம் | ரூ 3—0 |
| 6 மாத சந்தா | ரூ 1–12 |
| வெளி நாட்டிற்கு | ரூ 4—0 |

வாரப்பதிப்பு
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு சுக்கில௵ சித்திரை மீ 16உ. (28—4—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 53

வருஷ சந்தா எட்டே (0—8—0) அணா.

முந்துங்கள்! முந்துங்கள்!

## "பகுத்தறிவு."

சுக்கில வருஷம் சித்திரை மாதம் முதல்கொண்டு "குடி அரசு" பதிப்பகத்தாரால் "பகுத்தறிவு" என்பதாகப் பெயர்கொண்ட மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. இது மக்களுக்குபகுத்தறிவைவளரச்செய்வதற்காகவேயாகும். எல்லாவற்றையும்விடமனிதனுக்குப்பகுத்தறிவே பிரதானமானது என்கின்ற தத்துவமே அதன் முக்கிய கொள்கையாய் இருக்கும். அதை அநுசரித்து 'சித்திரபுத்திர'னின் கட்டுரைகளும் வேடிக்கை சம்பாஷணைகளும் அதில் வரும். அன்றியும் தமிழ் நாட்டில்உள்ள பகுத்தறிவில் சிறந்த பல பெரியோர்கள் முறையாக கட்டுரைகள் எழுதி உதவுவதாகவும் வாக்களித்திருக்கின்றார்கள். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள்.


இதன் சந்தா வருஷம் ஒன்றுக்கு 0—8—0 எட்டே அணா.

சந்தாதாரராக இஷ்டமுள்ளவர்கள் உடனே ஸ்டாம்போ மணியார்டரோ அனுப்புங்கள்.

விலாசம்:—

"பகுத்தறிவு" காரியாலயம், ஈரோடு.

புத்தகம் 1-க்கு



இல்வாழ்க்கையின்
இரகசியங்கள்.
Mysteries of Wedded Life.
இல்வாழ்க்கையில் ஈடுபட்ட
இருபாலார்க்கும் இன்றி
யமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தகஷாப்புகளிலும்கிடைக்கும்
வாஸன்புஸ்தகசாலை.
244, தங்கசாலைவீதி, சென்னை.

விலை ரூ. 2—0—0

(4-a)

## மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும் பரமானந்த சுருசுருப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரிக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு சயம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. ஷை நெ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0 வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

(10) தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனா பஜார், மதராஸ்.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
(4-b) தபால் பெட்டி 119, மதராஸ்.

தங்க மெடல்கள் பெற்ற

## மலையாள நாட்டுத் துணிகள்.


இரணியல் சேரியல் முதலிய வஸ்திரங்கள், தோர்த்து துண்டுகள், ஜரிகை துப்பட்டாக்கள் செலவு செய்து ஆர்டருக்கு அனுப்பப்படும்.

இ. எஸ். மாதவன் பிள்ளை,
சுதேசி ஜவுளி ஸ்டோர்,
இரணியல் Neyyoor P. O.
Travancore.

## முந்துங்கள்.

விலை ரூ, 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கியஜெர்மன்பெட்டி.



சாமான்களின் விபரம்

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷைசாட்டுபொத்தான்கள் செட் 12; ஷை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; கூர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரகபென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபாக்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர்படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி
(4-c) தபால்பெட்டி 119 மதராஸ்.

# இனம்! சுவிஸ் வைரம் இனம்!!

## SWISS BRILLIANTS.

ஜெர்மன் வைரம் என்றும் அமிரிக்கன் நீவ்டயமன் என்றும் கூறப்படும் வைரக்கலை விட சுவிஸ் வைரம் சிரேஷ்டமானதென்று நிபுணர்களால் ரூபித்து காட்டப்பட்டிருக்கிறது. சுவிஸ் வைரமானது ஒரு சம்மட்டியின் பலமான அடியாலும் உடைக்க முடியாதபடி அவ்வளவு கெட்டியானது. அது மிகவும் கெட்டியாக இருப்பதால் அதனுடைய ஜ்வலிப்பும், பிரகாசமும், மிகசோர்த்தியான மெருகும் 100 வருடங்கள் ஆனாலும் கூட மறைந்து போகாது. சுவிஸ் வைரமானது எவ்வளவு நேரம் நெருப்பில் போடப்படினும் வருடக்கணக்காக எண்ணெயில் போட்டு வைத்தாலும் அதன் நிறம் மாறாது. அரத்துக்கு தேய்வு போகாது.

எங்களிடம் எல்லா சயிஸ் (அளவு) கல்களும் இருக்கிறது. காரட் விலை $2\frac{1}{2}$ வெள்ளி முதல் 5 வெள்ளி வரையில் ஒரு (1) சயிஸ் முதல் 50 சயிஸ் வரையில் வரி வடிவம் (படம்) எழுதப்பட்டதும் இன்னும் பல மாதிரி மாணிக்க கல்வெட்டுகளும் அளவும் அச்சடிக்கப்பட்ட கேட்லாக் இனம்.

ஒரு சாம்பிள் சுவிஸ் வைரம் அடியிற்காணும் விலாசத்துக்கு எழுதி இனமாக பெற்றுக் கொள்ளலாம். இந்தியா, பர்மா, சிலோன் பகுதிகளிலிருந்து அனுப்பும் கடிதங்களுக்கு 2 அணா அல்லது 9 சதம் ஸ்டாம்பும் போஸ்டு கார்டாயிருந்தால் 1 அணா அல்லது 6 சதம் ஸ்டாம்பும் ஒட்டவேண்டும்.


**எங்ளோ சுவிஸ் மாணிக்க கம்பெனி,**
தபால் பெட்டி நெ. 360, பினங்கு.

The Anglo Swiss Gem Company,
P. O. Box 360, PENANG.

(11)



எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை,
ரோல்டு கோல்டு "கோல்டன்" புதுமாடல் கைக்கெடியாரங்கள். (4-h)




இதிற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜினோன் வாட்சு கம்பெனி,
பிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



Souriya REGD.

சகோதரிகளே!

எனக்கு 39 வருடங்கள் வரையில் புத்ரபாக்கியமில்லாமல் சதா அவஸ்தைப்பட்டு வந்த சூதக வியாதியானது "சௌரியா" என்னும் சஞ்சீவியால் குணப்பட்டதுடன் தற்போது புத்ர பாக்கியமடைந்த சந்தோஷத்தை என்னைப் போன்ற சகோதரிகளுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

சுந்தராம்பாள்.

# "சௌரியா"

ஆயிரக்கணக்கான பெண்மணிகள் எங்களின் வரப்பிரசாதமான

## 'சௌரியாவை'

சாப்பிட்டு சூது சூலை, சூதக வலி, (மாதவிடாய் காலத்தில் ஏற்படும் சகல விதமான வியாதிகள்) முதலிய வியாதியினின்றும் நீங்கி ஆரோக்கியவதிகளாய் புத்திர பாக்கியத்தையும் லக்ஷ்மி கடாக்ஷத்தையும் பெற்று சம்பன்னராய் வாழ்கின்றனர்.

விபரமான கேட்லாக் இனம்.
புட்டி 1 க்கு ரூபாய் 3—0—0.
பாக்கிங் தபால் செலவு வேறு

**சங்கர ராம் மெடிகல் ஹால்,**
**சேலம்.**

(15)


டாக்டர் டி. எம். நாயர் வாசகசாலை

## திறப்பு விழா.

திருச்சி வாகனேரி பெரியபாளையம் வாலிபர் சங்கக் கட்டிடத்தில் 8—4—29 டயில் டாக்டர் டி. எம். நாயர் வாசகசாலை உறையூர் கௌரவ மாஜிஸ்டிரேட் திருவாளர் ஆர். மருதை அவர்கள் தலைமையின் கீழ் திறந்துவைக்கப்பட்டது. திருச்சி ஜில்லா கல்விக்கழக அங்கத்தினர் திருவாளர் பி. சிவபிச்சை அவர்கள் டாக்டர் டி. எம். நாயர் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார். "சிக்கனம்" என்னும் பொருள் பற்றி திரு. ப. போர் மன்னன் அவர்களும் "வாலிபர் கடமை" என்பது பற்றி திருவாளர் டி. சிகாமணி அவர்களும் அந்தோணி அவர்களும் பிரசங்கித்தார்கள் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

## செய்யூர் ஆதிதிராவிட வாலிபர் சங்கம்

14—4—29 தேதியில் ஆர். சி. எம் ஹெட்மாஸ்டர் திரு வ. சிங்காரயர் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் நடை பெற்றது. அப்போது திருவாளர்கள் பிச்சை முத்து, எ. முனுசாமி உபாத்தியாயர், இ. எம். சாமி முதலியவர்கள் சுயமரியாதை இயக்கம், முன்னேற்றம், கல்வி, வாலிபர் கடமை முதலிய பொருள்கள் பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள் என்று இ. எம். சாமி அறிவிக்கிறார்.


இன்றே எழுதுங்கள்.
காப்பிக் குடியை ஒழிக்கும்

# றேப்பிப்பொடி

உஷ்ணத்தை மாற்றும்! உலக இன்பத்தை ஊட்டும்! கற்ப மூலிகைகளால் தயாரித்தது! காப்பி போன்ற மணமுடையது! இன்ப வாழ்க்கைக்குகந்தது! உபயோகித்ததுமே குணம். அயல் நாட்டுக்கு முன் பணம். வி. பி. வேறு. அரைடஜன் டின் ரூ. 1 3/4 டஜன் 1 க்கு ரூ. 3 1/4.
S. V. ராஜப்பா, றேப்பி பாக்டரி, பழனி.

# கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்ஸில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொரு வரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் எடிஷன் டிரேட் மார்க் உள்ளது ரூ1—8—0. உடனே எழுதுங்கள்.

வாஸன் புஸ்தகசாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

## ஏஜண்டு தேவை,

திருவாரூரில் நமது 'குடி அரசு' 'ரிவோல்ட்' பத்திரிகைகளை விற்பனை செய்ய ஒரு ஏஜண்டு தேவை. விபரங்களுக்கு எழுதுக
மானேஜர்,
'குடி அரசு' ஈரோடு.

# இழுத்துப் போட்டுப் பேசினாலும் எண்ணெய்ச் செலவே ஒழிய பிள்ளை பிழைக்காது

(கைவல்லியம் எழுதுவது.)

திருமங்கலம் சர்வ ஜீவகாருண்ய மகாநாட்டில் சீதையைத் தூற்றியும், ஞானசம்பந்தரை அறக் கொடியோன் என்றும் சுயமரியாதைக்காரர்கள் பேசுவதைப் பார்த்துக்கொண்டு லார்டுகோஷன் என்ன செய்கிறார் என்று திரு. கலியாண சுந்தர முதலியார் கேட்கிறார். யாரைக் கேட்கிறார்? சபையையா? ஆகாசத்தையா? தாம்படித்த படிப்பையா? பார்ப்பனர்களுடைய மனத் திருப்தியினிடமா? யாரை என்று யானறியேன். ஆனால் தேவாரம் ஒன்றிருப்பதாகக் கேள்விப் பட்டிருந்தாலும் லார்டுகோஷன் அவர்களுக்கு அதிலுள்ள திருகலும் செருகலும் தெரியாது. இங்கிலீஷ் ராமாயணப் புஸ்தகத்தை அவர் கண்டிருந்தாலும் ராம அவதாரத்திற்குக் காரணம் சொல்லும் கந்த புராணத்தை அவர் கண்டதேயில்லை என்பதை எல்லாரும் அறிவார்கள். புஸ்தகத்தைப் புதிப்பித்தாலல்லது லார்டுகோஷன் அவர்களை இழுத்துப் போட்டுக் கொள்ளுவதால் என்ன பிரயோஜனம்?

பலவித மூட வழக்கங்களின் மோகத்தை எழுப்பி வசீகரம் செய்யத்தக்க பாடல்களைப் பாடியும், தமோகுணத் தூக்கத்தையே விருத்தி செய்யும் தாலாட்டுகளைப் பாடியும், பாமர ஜனங்களுக்கு குருஜூ செய்ய சாஸ்திரக் குப்பைகளைக் கிண்டிக் கிளரிக் கொண்டிருந்தாலும் அதனால் கூட்டம் நம்மைச் சுற்றி பின் தொடரச் செய்வது முன் முடிந்ததுபோல் இப்பொழுது முடியாது. ஏனெனில், ஜனங்கள் முன் காலத்தில் கவலையற்று, கொழுத்து, சரீர சக்திகளையும், மனோ சக்திகளையும் வேறு போக்கின்றி கடவுளுடனே போராட்டம்; செய்ய உபயோகித்து யாகங்கள் செய்தார்கள்; எக்கிய ஓமம் முதலியவற்றால் அநேக மிருகங்களையும் நெய் முதலிய மனிதனுக்கு அவசியம் வேண்டிய பொருள்களையும் வீண்பண்ணினார்கள் கோவில்கட்டி தங்கத்தாலும் இரத்தினங்களாலும் உண்டாக்கின ஆபரணங்களைக் கடவுளுக்கு இட்டுக் களித்தார்கள். ஆனால், இப்பொழுதோ வாடி வற்றி வறுமையாய்க் கிடப்பதோடு ஊண், உடை, குடியிருப்பு வசதிகளிலும் மாறுதல் ஏற்பட்டு வருகிறது. வெகு காலங்களுக்கு முன்னிருந்த நிலைமை மாறி செயற்கை அழகிலீடுபட்டு பழக்க வழக்கங்களும் மனப் பான்மையின் மேன்மையும் மேனாட்டை நோக்கி மேலே பார்ப்பதால் பழைய பாட்டு இனிப் பலிக்காது.

சீதையையும் திருஞானசம்பந்தரையும் குற்றம் சொன்னார்கள் என்று ஜீவகாருண்ய மகாநாட்டில் திரு. கலியாணசுந்தரமுதலியார் சொன்னதாக "சுதேசமித்திரன்" மாசி 19-ந் தேதி பத்திரிகைசொல்லுகிறது. திருஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவில் போட்டது கொடியது என்று "குடி அர"சில் முன் ஒரு வியாசம் வந்தது. அதைக்கண்டு மதுரையில் சமணர்களைக் கழுவில் போட்டதற்கு அகச்சான்றில்லை என்றும் பெரிய புராணம் சீர்திருத்த வந்த ஆசார நூலென்றும் சொன்னார். அதற்குக் "குடி அரசு" சமாதானமுமெழுதிற்று. பின்னும் சென்னையில் சபை கூட்டினதும் அதில் நடந்த விஷயங்களுக்கு "குடி அரசு" எழுதின விஷயங்களும் உங்களுக்குத் தெரியும். திருஞானசம்பந்தரைப்பற்றி அவ்வளவோடு முடிந்தது. பின்னும் இப்பொழுது ஞானசம்பந்தரை இழுத்துப் போட்டுக் கொண்டும் சீதையைக் குற்றம் சொன்னதாகவும் எங்கள் மீது பழிபோட்டு அதனால் சனசமூகம் எங்களை வெறுத்துவிடுமென்று அவருடைய பழைய சிநேகிதர்களான ஓரவஞ்சனையுடைய காங்கிரஸ்காரர்களுக்குக் காட்ட சபைத்தலைமை வகிக்குமிடமெல்லாம் சொல்லுகிறார். ஆனதால் "குடி அரசு" இதற்கு நியாயமான முறையில் புஸ்தகத்திலுள்ளதையும் மனித அறிவினால் உணர்ந்து ஒத்துக்கொள்ளக் கூடியதையும் எடுத்துச் சொல்லும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

புது விஷயங்களை வாசகர்கள் படிக்கவேண்டியிருப்பதால் இதைச் சுருக்கிச் சொல்லுகிறேன். ஜீவகாருண்ய மகாநாட்டில் ஜீவகாருண்யத்தையும், அதன் ஒழுக்கங்களையும், அனுஷ்டிக்கும் மார்க்கங்களையும், அதன் வழி ஒழுகினவர்களையும் பற்றிச் சொல்லவேண்டும். அவசியமானால் ஜீவகாருண்யத்திற்கு விரோதம் செய்கிறவர்களையும் அவர் செய்கைகளையும் விபரமாக எடுத்துச் சொல்லலாம். அதையெல்லாம் விட்டு விட்டு ஞானசம்பந்தரைக் குற்றம் சொல்லுகிறார்கள் என்று இழுத்துப் போட்டுக் கொண்டதினால் குற்றம் சொன்னவர்கள் எந்த விதத்தில் ஜீவகாருண்ய மகாநாட்டுக்குக் குற்றமுடையவர்களாவார்கள்? ஞானசம்பந்தரை ஜீவகாருண்யமில்லாதவர் என்று சொல்ல நியாயமுண்டு. அவரைக் குற்றம் சொன்னவர்களைக் குற்றம் சொல்ல நியாயமிடம் கொடுக்கவில்லையே. திருஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவில் போட்டதைப்பற்றிய கதைகளிருக்கின்றன, புராணங்கள் இருக்கின்றன, தனிப் பாடல்களிருக்கின்றன, கையும் களவுமாகக் காட்டும் கோவில்களிலிருக்கும் ஓவியங்களிருக்கின்றன, திருநாளிருக்கிறது, திருவிளையாடல் புராணமிருக்கிறது, அதில் காட்டியிருக்கும் படமிருக்கிறது, அந்தப் புராணத்தைச் சொல்லிப் பிழைக்கும் சைவப் பண்டிதர்களிருக்கிறார்கள். இத்தனையும் போதாவிட்டால் அவரே பாடின பாட்டுமிருக்கிறது. இவற்றையெல்லாம் கடல் கொண்டு போகவில்லை. பண்டிதர்கள் முதற்கொண்டு பாமரர்கள் வரையிலுமுள்ள எல்லாருடைய கண்களுக்கும் முன்னால்தானிருக்கின்றன. இத்தனையும் இப்படி இருக்கையில் திருஞானசம்பந்தரைக்குற்றம் சொன்னவர்களை ஜீவகாருண்ய மகாநாட்டில் குற்றம் சொன்னது சரியா? புஸ்தகங்களில் எழுதியிருப்பதைப் படித்தவர்கள் சொன்னார்கள். திருஞானசம்பந்தரைப் பெரியவரென்று குற்றத்திலிருந்துநீக்கினால் எடெழுதினவர்களைக் குற்றவாளிகள் என்று சொல்லுங்கள், திருநாள் செய்கிறவர்களைக் குற்றம் சொல்லுங்கள், பெரிய புராணம் படித்து பெரியசைவனென்று திரைமறைவில் விருந்து சாப்பிடுகிறவர்களைக் குற்றம்சொல்லுங்கள், திருவிளையாடல் புராணத்தை ஊரெல்லாம் பரப்பின பண்டிதர்களை நரகத்திற்குப் போகச் சொல்லுங்கள்; எடுசொன்ன பிள்ளையாரும் எடெழுதின நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் அகஸ்தியர், வால்மீகி, வியாசர் இவர்களுக்கு மேற்பட்டவர்களாக நீங்கள் நினைத்தாலும் நினையுங்கள். அதைச்சொன்னவர்களைக் குற்றம்சொல்லி; அந்த நியாயத்தை விசாரிக்க லார்டுகோஷன் அவர்கள் கவர்ன்மெண்டைக் கூப்பிடக் காரணமென்ன?

திருஞானசம்பந்தரைக் குற்றத்திலிருந்து தப்பித்துவிடுங்கள் அல்லது சேக்கிழாரையும் நம்பியாண்டார் நம்பியையும் பிள்ளையாரையும் பொய்யர்களாகவோ பெரியவர்களாகவோ சொல்லுங்கள் அல்லது முன் பின் நியாயங்களை நினைத்துவாயை மூடிக்கொள்ளுங்கள். இதற்காவது சமய அறவழி வாதமென்று பேர் கொடுக்கலாம். செய்தவர்களை விட்டுவிட்டு எடெழுதினவர்களைத் தள்ளி ஊரெல்லாம் பாடம் சொல்லும் பண்டிதர்களையும் தாங்களாகவே நினைத்துக் கொண்டு, அதைப் படித்தும், பண்டிதர்கள் பிரசங்கம் கேட்டும், ஓவியத்தைப் பார்த்தும் திருநாளைத் தெரிசித்தும் குற்றம் சொன்னவர்களைக் குற்றம் சொல்லுவது எந்த அறவழி ஐயா? நகரம் தகரமாகுமா? மகரம் தானா? என்னும் பண்டிதவாதமல்லவே இங்கு. இமயகிரியிலிருந்து கன்னியாகுமரிவரையிலும் விஷயமானது நியாயத்தில், அவசியத்தில், உண்மையில் பொதுவில் இருக்க வேண்டுமென்பதல்லவோ விவகாரம்.

ஆகமசாஸ்திர புராணங்களும், தேவாரப் பதிகங்களும் தெரிந்தநாடார்களிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் யோக சாஸ்திரத்தின் அர்த்தம் கேட்டுக் கொண்டது உடுமலைப்பேட்டை ஸ்ரீ பழனியப்ப நாடாரிடம். இது விஷயம் வேறு. திரு. கலியாணசுந்தர முதலியார் நாடார் கூட்டத்தில் சமணர்களைக் கழுவில் போட்டதற்கு அகச்சான்றில்லை அதனால் ஒத்துக்கொள்ள மாட்டேன் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்றார். நாடார் மகாநாட்டில் அகச்சான்றைப் பற்றிப் பேசுவதற்கு நமக்கு நியாயமில்லை, அகச்சான்றாகவெல்லாம் கோவில்களிலும் வேதசாஸ்திரங்களிலுமிருக்கின்றன. கோவில்களில் நாடார்கள் விடப்படுவதில்லை. அதனால் கோவில் உட்பிரகாரச் சுவரிலிருக்கும் அகச்சான்றே அவர்கள் கண்டதில்லை. வேதபாடசாலையிலோ தேவாரப் பள்ளிக்கூடங்களிலோ அவர்களைச் சேர்த்துக் கொள்ளாததினால் அதற்குள்ளிருக்கும் அகச்சான்றும் அவர்களுக்குத் தெரியாது. அகச்சான்று இருக்கிறதா இல்லையா? என்று தெரிந்துகொள்ளமுடியாத நிர்ப்பந்தத்திலிருக்கும் சபையில் அகச்சான்று இல்லை என்று நினைத்துக்கொள்ளும்படி செய்தாலும் புறச்சான்றை எங்கே புகுத்துவது. அகச்சான்றும் எடுத்துக்காட்டினார்கள். அப்பொழுதும் திரு. முதலியார் அவர்கள் ஞானசம்பந்தரையும் சுயமரியாதைக்காரர்களையும் விட்டபாடில்லை. நடுநிலைச் சான்றும் நியாயச் சான்றும் நடுவில் வருவதற்கு வெள்ளைக்கார அச்சுச்சான்று அனுகூலித்தப் புஸ்தகச் சான்றை மறந்துவிடுகிறார்களே!

வீரமும் கட்டிற்பற்றுதலுமுடைய பெரும் பலமிருந்த சமூகத்தைத் தள்ளி அவர்களுடைய மனிதத்தன்மைகளை நசுக்க சமயத்தைக்காட்டி அதில் தங்களைப் பெரியவர்களாகப் பாவித்து பல சல்லியங்களைச் சேர்த்துக்கொண்டு, சைவ சமயக் கூட்டத்தைக் குறை கூறுகிறார்கள் என்று பழையகால வழக்கப்பிரகாரம் பழைய ராஜாக்களைக்கொண்டு இமிசை செய்தது போலவே, காலசக்தியின் தூதாக பிரிட்டிஷ் ஜாதி இந்தியாவிற்கு வந்திருக்குமிந்தக்காலத்தில், சிறிது தைரியமாக நியாயத்தோடு, ஏதேனும் ஒருசமூகத்திற்குப் பெரிய அனுபூதி உண்டாயின் அது பிறருக்கும் கொடுக்கத்தக்கது, லோபத்தினால் நாம் கொடுக்க மறுத்தால் நம் நாட்டிற்கும் சமயத்திற்கும் நமக்கும் நஷ்டமுண்டாகு மென்று சொல்லும் சுயமரியாதைக்காரர்களை கருவறுக்க இந்த அரசாங்கத்தையும் கூப்பிடுகிறார்கள். இவர்கள் காங்கிரஸ் காரர்களாம்! இங்கிலீஷ் கவர்ன்மெண்டை நடுங்கச்செய்யும் நீதியைப் பாருங்கள்! மிருகம் போகுமிடத்திற்கு மனிதன் போகவும் ஒழுக்க ஆசாரங்களில்லாத அர்ச்சகர்கள் பூசிக்கும் கடவுளை உண்மைப் பக்தியுடையவர்கள் போய்க் கும்பிடவும் தாசிவிட்டுத் தரையில் தெறண்டு கிடக்கும் "பகவத் பிரசாத"த்தை மெய்யன்பர்கள் தலையில் தாங்கிக்கொள்ளவும், உயர்ந்த மதப்பயிற்சிக்குரிய சாஸ்திரம் எல்லாரும் படிக்கவும் விடவேண்டுமென்று கேட்டால் இந்த உரிமைகளைத் தடுக்க கழுமரத்தை நாட்ட வா—

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க).

# "இந்திய மாதா"

(திரு. அய்யாமுத்து எழுதுகிறார்)

(11-ம் கட்டுரைத் தொடர்ச்சி.)

பஞ்சமர்களுக்கெனத் தனிப்பாடசாலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இதில் பிள்ளைகளுக்கு கல்வியும், கணக்கும், சித்திரமும் கைத்தொழிலும், சரித்திரமும், சாஸ்திரமும் அரசாங்கச் செலவில் போதிக்கப்பட வேண்டும். இப்பள்ளிச் சிறுவர், சிறுமிகள் படித்து தொழில் புரிந்து வாழ்வு நடத்தும் வரை இவர்கள் அரசாங்கச் செலவிலே போஷிக்கப்படவேண்டும். இது கட்டாயப்படுத்தப்பட வேண்டும். இவ்விதமாக நாளைய தினம் ஏற்பாடு செய்வீர்களாகில் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகட்குள் பஞ்சமர் நிலை வேறாகிவிடும். இதைச் செய்யும்படி சீர்திருத்தக்காரர் போராட வேண்டும். மேட்டூர் திட்டங்களும், அண்ணாமலைக்கல்லூரிகளும், மற்றெல்லாத் திட்டங்களும், நிறுத்தப்பட்டு, அப்பணமெல்லாம் பஞ்சமச் சிறுவர்களும், சிறுமிகளும் கல்வி கைத்தொழில் கற்று முன்னேற்றமடையச் செலவு செய்யப்படல் வேண்டும்

கல்வியாலும், பொருளாதார நிலையாலும் பஞ்சமர் கீழ்ப்பட்டு நிற்கின்றனர் என்பதை நாம் எடுத்துக்காட்டி ஒப்புக்கொண்ட போதிலும், கல்வியும் பொருளாதாரமும் அவர்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்த போழ்திலும் அவர்களை சமூக நிலையில் தாழ்மைப்படுத்தி வைக்கும் கொடிய பேய் மற்றொன்று உளது. அது தான் மதம், அது தான் சாதி. இவையிரண்டுமொழிந்காலன்றி பஞ்சமர் எனப்படுவோர் மனிதராக வாழ இயலாது' எனெனில் இன்றைய தினம் ஐகோர்ட்டு ஜட்ஜியாக வேலைபார்க்கும் ஒரு ஈழவசாதியைச் சேர்ந்தவர் வைக்கத்துப் பாதைகளில் நடக்க வொட்டாமலும், கல்பாத்தி அக்கிராரத்தில் நுழைய வொட்டாமலும், சட்ட பூர்வமாக தடுக்கப் படுவதை நாம் பார்க்கிறோம். தாழ்ந்த வகுப்பைச்சார்ந்தவர்கள் எவ்வளவு படித்தபோதிலும், எவ்வளவு அதிகாரமிருப்பினும், பணமிருப்பினும், பட்டை பட்டையாக சாம்பலடித்து, காய்களை கழுத்து நிறையத் தொங்கவிட்டுக் கொண்டாலும் 'அவன்பறையன், அவன் சக்கிலியன்' என்ற காரணம் சொல்லி அவனை பொதுக் குளங்கள், கிணறுகள், கோவில்கள் மடங்கள் ஆகியவற்றின் பாத்யம்மறுக்கப்படுவதைப்பார்க்கிறோம். ஆனது பற்றியே செங்கல்பட்டில் கூடிய சுயமரியாதை மகாநாட்டில், பறையர், சக்கிலியர், நாயக்கர், அய்யர், அய்யங்கார், நாயுடு, முதலியார், கவுண்டர் ஆகிய சகல வேற்றுமைக் குறிகளான சாதிப்பட்டங்கள் ஒழிய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள்.

இந்நாட்டு ஆபாசங்களைத் திரட்டிக்குவித்த மிஸ் மேயோ பஞ்சமர் விஷயமாகக் கூறுவது:—

"அயல் தேசத்தார் இந்தியர்களை நிறவேற்றுமையுடன் நடத்துகிறார்களென இந்திய அரசியல் வாதிகள் சொல்லுகின்றனர். ஆனால் இந்தியாவில் கோடிக்கணக்கான ஜனங்களை கல்வியில்லாதவர்களென்றும் தீண்டாதவர்களென்றும் ஒதுக்கி வைத்து அவர்களை மிக இழிவாக நடத்துவதற்கு என்ன சமாதானம் கூறுகிறார்கள். தன் தேச மக்களுக்கே, தன் சகோதர சகோதரிகளுக்கே சாதாரண பிறப்புரிமைகள் கூட வழங்குவதற்கு விருப்பில்லாத அரசியல் வாதிகள் பிற தேசத்தார் தங்களிடம் நிற வேற்றுமை காணபிக்கிறார்கள் என்று குறை கூறுவதால் என்ன பயன்."

இக் கேள்வியாகப்பட்டது இந்திய அரசியல் வாதிகளின் தொண்டையைக் கவ்விப்பிடிப்பது போல் இருக்கிறது. தீண்டாமை தீண்டாமை என்று ஓலமிடும் காந்தியடிகள் தீண்டாமை நீங்குவதற்காக காரியத்தில் எதைச்சாதித்து விட்டார் என்று அறிய ஆசைப்படுகிறேன். அவர் தமது சபர்மதி ஆசிரமத்தில் உயர்ந்தசாதிப் பையன்களையும் பெண்களையும் சேர்த்துக் கொள்ளாமல் தீண்டாத வகுப்புப் பிள்ளைகளில் நூறு பேரையாவது கூட்டித்திரட்டி அவர்களுக்குக் கல்வி, ஒழுக்கம், கைத்தொழில் ஆகியவற்றை பயிற்றுவித்திருப்பாராயின் அவர் உண்மையாகவே மகாத்மாவாயிருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் வாயால் தீண்டாமை விலக்கை ஓதிக் கொண்டும், வயிற்றில் வர்ணாசிரமக்குரங்கைக் கட்டிக்கொண்டுமிருப்பதால் காந்தியைப் போன்றபைத்தியக்காரர்வேறொருவரில்லையென வரப் போகும் சந்ததியார் எள்ளி நகையாடுவர் என்பதில் ஐயமில்லை.

மற்றும் பல காங்கிரஸ் சபைகளும், ஹிந்தி மகாசபைகளும், தலைவர்களும் தீண்டாமையுடன் வாய்ப்போர் புரிவதால் பயனென்ன? என்று கேட்கிறேன். காரியத்தில் தீண்டப்படாதவருடைய நிலையை உயர்த்த, சமூக நிலையைஉயர்த்த, கல்வி நிலையை உயர்த்த, செல்வ நிலையைஉயர்த்த இவர்கள் என்ன செய்து விட்டார்கள்? பிள்ளையைக் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது போல ஒருபக்கம் தீண்டாமை விலக்குத் தீர்மானமும், மற்றொரு பக்கம் வர்ணாசிரம மகாநாடுகளும் கூட்டுவிப்பதால் என்ன பயன் விளையப் போகிறது?

"அமெரிக்கநாட்டில் நீக்ரோசாதியார் கேவலமாக நடத்தப்படுகையில் இந்தியாவில் தீண்டாதாரைப்பற்றிப்பேச மேயோவுக்கு என்ன யோக்கியதை யிருக்கிறது" என சிலர் கண்டித்தார்கள். கடவுள் நம்பிக்கையுள்ள அமெரிக்க வெள்ளையர்கள் கருப்பு நீக்ரோ சாதியாரைத்தங்கள் பக்கத்தில் அணுகவொட்டாமல் தடுப்பதில் அதிசயமொன்றுமில்லை. அக்காருண்யமான கடவுள், பாரபட்சமற்ற கடவுள், அச்சர்வ சக்தியுள்ள கடவுள் அமெரிக்க நாட்டில் சில மனிதர்களை வெண்மையாகவும் செம்மையாகவும், ரூபலாவண்யத்தோடும் படைத்துவிட்டு, அதே நாட்டில் கன்னங்கரேலென்று உதடுபிதுங்கிய சுருட்டைக் கருப்பன்களை ஏன் படைத்தார் என்று விளங்கவில்லை. இன்றெல்லாம் பாடுபட்டாலும் இன்னுமிந்த ஜன்மமே பாடுபட்டாலும் நீக்ரோவை அமெரிக்க வெள்ளையனைப்போல் செய்யமுடியாது. சர்வசக்தனான கடவுளாலும் செய்யமுடியாதென்றே தோன்றுகிறது. எனெனில் அவருக்கு அது முடிக்கும் திறமையிருந்தால் வெகு காலத்துக்குமுன்பே முடித்திருப்பார். அவருக்கு அத்திறமை இல்லாதிருப்பதால்தான் தனது சிருஷ்டிகளான நீக்ரோக்களின் அவமதிப்பை பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் இந்நாட்டிலிருக்கும் பஞ்சமர்களை நன்றாகப் படிக்கவைத்து, அவர்களுக்கு நல்ல அதிகாரம் கொடுத்து, அவர்களும் துரைபோல சட்டைமாட்டிக்கொண்டால் பார்ப்பனப்பெண்கள் தாராளமாக மணந்துகொள்ள முன்வருவார்கள். ஆனால் ஒரு நீக்ரோவை எந்த நிலையில் உயர்த்தினாலும், அவனுடைய கருப்பு நிறமும் பிதுங்கிய உதடும், சுருட்டைத்தலையும், விகாரமான பார்வையும் அவனிடமிருந்து நல்ல ரூபலாவண்யமுள்ள பெண்களை விரட்டிவிடும். இதிலிருந்து என்ன விளங்குகிறதென்றால், பார்ப்பனனுக்கும் பறையனுக்கும் செயற்கையான வித்தியாசங்களேயன்றி இயற்கையான வித்யாசங்கள் இல்லைஎன்பதே. கருத்தபார்ப்பனனுமுண்டு. வெளுத்த பறையனுமுண்டு. பறையனுக்கும் சக்கிலியனுக்கும் சகல உரிமைகளையும் வழங்கினால் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் அவன் பார்ப்பனனைவிட உயர்ந்த நிலைமைக்கு வந்துவிட முடியும்.

திருநெல்வேலியில் கூடிய சைவப்பெரியார் தனிக்கூட்டத்தில் தலைமை வகித்த அன்பர், அன்பெனும் சிவனின் தொண்டர், அன்பே சைவமெனும் பக்தர், சைவ அன்பைப்போல் பிறமதங்களில் அன்பில்லை யென்ற ஆராய்ச்சியாளர் என்ன சொன்னார்? சாதிபேதமின்றி எல்லோரையும் கடவுள் வழிபாட்டுக்காக கோயிலுள் அனுமதிக்கலாம், ஆனால் சில சாதியார் அசுத்தமாக இருக்கிறபடியால் அனுமதிக்கப் படுவதில்லை என்பதாகும்!

ஐயா! சைவப்பெரியாரே! தாங்கள் கோரும் 'சுத்தம்' அகச்சுத்தமா, புறச்சுத்தமா? அகச்சுத்தமாயின், அகச்சுத்த முள்ளவனுக்கு கோவில் எதற்கு? புறச்சுத்தமாயின், நாளையதினமிருந்து தங்களை ஒரு அழுக்குள்ள குடிசையில் குடியிருக்கச்செய்து, திருநெல்வேலியிலுள்ள கக்கூசு மலங்களையெல்லாம் வாரியெடுத்து அப்புறப்படுத்துவதைத் தங்களுக்குத் தொழிலாகக்கொடுத்து, அதற்காக தங்களுக்கு மாதம் ஐந்து ரூபாய் சம்பளங்கொடுத்து, கிணற்றிலும் அநுமதிக்காமல் தடுத்து வைக்கப்பட்டால் தாங்கள் 'சுத்தமாக' இருக்க முடியுமா?

ஹே! வெட்கங்கெட்ட பெரியாரே! தங்களுடைய, அன்பும், அறிவும், ஆராய்ச்சியும், சமயப்பற்றும் இதை ஏன் உணர முடியாமற்போயிற்று? சைவத்தில் ததும்பும் 'அன்பு' கிறிஸ்தவ மதத்திலுமில்லை"என்ற பெரியீர்! சைவத்தினால்,- கொடுஞ் சைவத்தினால், அழுக்குற்று, அடியுற்று, அடிமைப்பட்டு, கொடுமைப்பட்டு, சிறுமைப்பட்டுக் கிடந்த எத்தனை "பஞ்சமர்" குடும்பங்களை கிறிஸ்து மதம் ரட்சித்து, அவர்களைக் குளிப்பாட்டி, நல்ல கல்விதந்து, கைத்தொழில் தந்து, அவர்களை லாயர்களாகவும், பண்டிதர்களாகவும், போலீஸ் இன்ஸ்பெக்டர்களாகவும், தாசில்தார்களாகவும், முன்சீப்புகளாகவும், மற்றும் பல துறைகளில் அவர்களை உயர்த்தியும், அமர்த்தியும் உங்கள் சைவவேளாளர்களை அவர்கள் காலில் விழச் செய்துள்ளது. அவர்கள் உணவைக்கருதியும், உடையைக்கருதியும், அவர்களைத்தாழ்த்தி வைக்காமல் உயர்த்திப்பார்க்கும் தன்மை அக்கிறிஸ்தவக் கடவுளுக்கும் கிறிஸ்தவ மிஷினரிகளுக்கும், கிறிஸ்தவ அன்பிற்கும், உளதென்பதை அறிந்து கொள்ளுங்கள். பழனி என்ற சைவப் பெயரையும், ராமன் என்ற வைணவப் பெயரையும் அவர்கள் மாற்றி சைமன், மோஸஸ்என்ற நாமங்களைச் சூட்டியவுடன் அவர்களை எவ்வளவு உயர்த்திவிடுகிறார்கள் என்பதை அறியுங்கள். அவ்விதம் பெயர் மாற்றம் உடையவர்களைக்கண்டு தாங்கள் எவ்விதம் வணங்குகிறீர்கள் என்பதை உணருங்கள்.

பறையர், சக்கிலியர், தொம்பர், தோட்டி, பள்ளர், குறவர், வலையர், எனப்படும் மாசற்ற மனிதசாதியாரே! தீண்டப்படாமலும், பார்க்கப்படாமலும் அவதிப்படும் தாயாடிச்சோதர சோதரிகளே! நீங்கள் எழுந்து நில்லுங்கள். கல்வியையும், கைத்தொழிலையும் போற்றுங்கள். சமயத்தையும் சாதியையும் தூற்றுங்கள். சாதியாலும், சமயத்தாலும், நீங்கள் பாழ்பட்டுக் கிடப்பதை உணருங்கள். கல்வியும், கைத்தொழிலும் உங்களை மேம்படச் செய்யுமென்பதை தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் என்றையதினம் மேம்பட எண்ணுகிறீர்களோ அன்றையதினமே சைவத்தையும், வைணவத்தையும், இந்து மதத்தையும், வர்ணாசிரம தர்மத்தையும், சமயத்தையும், சாஸ்திரத்தையும், கோவிலெனப்படும் விபசார விடுதிகளையும் விட்டொழியுங்கள். அவைகளைப் பற்றி மனதிலும் சிந்திக்காதேயுங்கள். நீங்

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# சேலத்தில் சுகாதார மந்திரி கனம் திரு. முத்தையா முதலியார்.

முதல்நாள்:—சேலத்தில் 20—4—29-ந் தேதி காலையில் சென்னை அரசாங்க சுகாதார மந்திரி கனம். முத்தையா முதலியார் அவர்களையும் பாரியதரிசி திரு. மாணிக்கவேலு நாயக்கர் எம். எல். சி. அவர்களையும் சேலம் பிரமுகர்கள் வாத்தியங்களுடன் வரவேற்றார்கள். கனம் மந்திரி அவர்கள் சேலம் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தில் தலைமை வகித்தார். உபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்ட பின் தலைவர் முகவுரைச் சொற்பொழிவு நடந்ததும் பல நண்பர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். தலைவர் முடிவுரையுடன் ஆண்டுவிழா இனிது நடந்தேறியது. மற்றும் கனம் மந்திரியாருக்கு முனிசிபல் உபசாரப் பத்திரம் முதலியவைகள் வாசித்துக் கொடுக்கப்பட்டன

இரண்டாம்நாள்:—சேலம் வரி கொடுப்போர் மகாநாட்டுத் தலைவரான கோவை ஜில்லா போர்டு உபதலைவரும் முனிசிபல் கௌன்சிலரும் பிரபல வியாபாரியுமான திருவாளர் எஸ். என். பொன்னைய கவுடர் அவர்களும், திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி, எ. ஆர். சிவானந்தம், பூவாளூர் பொன்னம்பலனார் ஆகியவர்கள் 21—4—29ந் [illegible] ஜங்ஷனுக்கு வந்து சேர்ந்தார்கள். சேலம் பிரமுகர்களால் அவர்கள் ரயில்வே மேடையில் வரவேற்கப்பட்டு செவ்வாய்ப்பேட்டை கடைவீதி ஆரம்பத்திலிருந்து வாத்தியங்களுடன் மோட்டார் வாகனத்தில் ஊர்வலமாய் சேலம் ஜில்லா போர்டு மண்டபத்திற்கு அழைக்கப்பட்டு அங்கு சேலம் முனிசிபல் சேர்மென் அவர்களாலும் சேலம் ஜில்லாபோர்டு பிரசிடெண்ட் வைஸ்பிரசிடெண்ட் அவர்களாலும் குதூகலத்துடன் வரவேற்கப்பட்டபின் மகாநாட்டு மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மண்டபத்தில் ஏராளமானகூட்டம்நிறைந்திருந்தது. உடனே சுகாதார மந்திரியார் கனம் முத்தையா முதலியார் அவர்கள மகாநாட்டைத் திறந்துவைத்தவுடன் சேலத்திலுள்ள சுமார் 10 ஸ்தாபனங்களால் கனம் மந்திரியாருக்கு உபசாரப் பத்திரமும் மற்றும் தலைவர் திரு, பொன்னைய கவுடா அவர்களுக்கும் ஈ. வெ. ராமசாமியாருக்கும் உபசாரப் பத்திரங்களும் வாசித்துக் கொடுக்கப்பட்டன. இவற்றிற்கு முறையே விடை அளித்த பிறகு மகாநாட்டு உபசரணைத்தலைவர் திரு. ஆர் பாலசாமி செட்டியார் பி. ஏ. பி. எல். அவர்கள் வரவேற்பு உபந்யாசம் செய்தார். பின்னர் அக்கிராசனர் பிரேரேபணை நடந்ததும் அக்கிராசனர் தமது அக்கிராசன உபந்யாசத்தைப் படித்தார். பிறகு மகாநாடு விஷயாலோசனைக்குக் கலைந்தது. சேலம் திருவாளர் சி. வி. சி. கந்தப்ப முதலியார் அண்டு பிரதர்ஸ் முருகேச முதலியார் அவர்கள் வீட்டில் மந்திரிக்கும் மற்றும் தலைவர்களுக்கும் விருந்து நடந்தது. பிற்பகல் 4 மணிக்கு மகாநாடு கூடி சுமார் 20 தீர்மானங்கள் செய்யப்பட்டன. மாலை சேலம் சேர்மென் திரு. தம்மண்ண செட்டியார் பி. ஏ. பி. எல். அவர்கள் பங்களாவில் கனம் மந்திரிக்கும் மகாநாட்டுத் தலைவருக்கும் பிரதிநிதிகளுக்கும் ஒரு சிற்றுண்டி விருந்து நடந்தது. மகாநாட்டுத் தலைவர் அவசரமாய் இரவு வண்டியில் திரு. எ. ஆர். சிவானந்தம் அவர்களுடன் கோவைக்குச் சென்றுவிட்டார்.

மறுநாள் (22—4—29).—மறுநாட் காலையில் கனம் மந்திரி அவர்களும், திரு. மாணிக்கவேலு நாயக்கர்எம். எல். சி, அவர்களும், திரு. ஈ. வெ. இராமசாமியாரும், திரு. கண்ணப்பர் அவர்களும், சேலம்சேர்மென் தம்மண்ணசெட்டியார், வக்கீல் திரு. பெரியசாமி பிள்ளை, ஆர். கிருஷ்ணசாமிமுதலியார், அர்த்தநாரிசெட்டியார், அமிர்தலிங்க முதலியார், மதுரை பத்பநாப நாயுடு, பள்ளிபாளையம் சாமிநாதம், பெரியசாமி முதலியார், வெங்கடாசலம் பிள்ளை, ஓமலூர் கதிரி செட்டியார், முதலிய கனவான்களும் சேலத்திலிருந்து 4, 5 மோட்டார்களிலும் இரண்டு மூன்று பஸ்களிலுமாக இராசிபுரம் சுயமரியாதை மகாநாட்டிற்குப் புறப்பட்டுச் சரியாக ஒன்பதரை மணிக்கு இராசிபுரம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு முதலில் இராசிபுரம் யூனியன் சங்கத் தலைவரும் சங்கத்தார்களும் மேளவாத்தியங்களுடன் வரவேற்று மந்திரிக்கு மாலை போட்டு எல்லோருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கினார்கள். அவ்விடத்தைவிட்டுச் சென்றவுடன் ஊர்ப்பொதுஜனங்கள் [illegible]ளுடன் எல்லோருக்கும் மாலையிட்டு வரவேற்று ஊர் வலமாக அழைத்துச் சென்றார்கள். கூட்டத்தில் சுமார் இரண்டு ஆயிரம் பேர்கள் பெண்கள், ஆதிதிராவிடர்கள் முதலியவர்கள் உட்பட கூடிவிட்டார்கள். வழி நெடுக வீடுகளிலும் கடைகளிலும் ஊர்வலங்கள் நிறுத்தப்பட்டு மாலைகள் இடுவதும் பழம் கற்கண்டு சோடா முதலியவைகள் கூட்டத்திற்கு வழங்குவதுமாகவே இருந்தது. மகாநாட்டு கொட்டகை உள்ளூர் அதிகாரிகளின் தொல்லையால் ஊருக்கு வெளியில் அதாவது ஜில்லா போர்டு பள்ளிக்கூடத்திற்கு எதிரில் அமைக்கப்பட்டிருந்தாலும் தலைவர்கள் கொட்டகைக்குள் நுழைய இடமில்லாமல் 5000 ஜனங்களுக்கு மேலாக கூடிவிட்டார்கள். கூட்டம் எதிர்பார்த்ததற்கு மேலாக கூடிவிட்டதால் கொட்டகையின் நான்குபுறத் தட்டிகளையும் எடுக்க வேண்டியதாயிற்று. கொட்டகை அலங்காரமும் வீதிகளில் வளைவுகளும் தோரணங்களும் மாகாண மகாநாடு போல் ஆடம்பரமாக சிங்காரிக்கப்பட்டிருந்தன. அவ்வூர் அதிகாரிகளின் விஷமமும் திரு. ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் அங்கு நேரில் சென்று அவ்வூர் மக்களுக்குச் சுயமரியாதையைப் பற்றிச் செய்த விஷமப் பிரசாரமும் இராசிபுரத்தைக் கலக்கிவிட்டதானாலும் தலைவர்கள் காலடிவைத்ததும் எதிரிகள் விஷமப் பிரசாரக்காரர்கள் இவர்கள் வார்த்தையைக் கேட்டு இவர்களுக்கு அனுகூலமாய் இருந்து மகாநாட்டை நடக்கவிடாமல் பார்த்துக் கொள்ளுவதாகச் சொன்னவர்கள் அவர்களுடைய பெண்டு பிள்ளைகள் எல்லோரும் மகாநாட்டுப்பந்தலுக்கு வந்து தீரவேண்டிய அவ்வளவு ஊக்கத்தை உண்டாக்கிவிட்டது. மகாநாடு கூடியதும் கனம் மந்திரியவர்கள் மகாநாட்டைத்திறந்து வைக்கு முன் தான் சுயமரியாதை இயக்கத் தத்துவங்களையும் அதைப்பற்றிப் பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் செய்யும் விஷமப் பிரசாரத்தின் கருத்துக்களையும் காங்கிரஸ் மதுவிலக்குப் பிரசாரப் புரட்டுகளையும் யாவருக்கும் எளிதில் புரியும்படி நன்றாய் விளக்கிச் சொல்லி மகாநாட்டைத் திறந்து வைத்தார். பிறகு வரவேற்பு அக்கிராசனர் வேளூகுறிச்சி ஜமீன்தார் திரு. சோமசுந்தரம்அவர்கள்வரவேற்புஉபந்யாசம் படித்த பிறகுமகாநாட்டுக்கு அக்கிராசனராகதிரு. ஈ. வெ. ராமசாமியாரைப் பிரேரேபித்து கனம் மந்திரிக்கும் ஈ. வெ. ராமசாமியாருக்கும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கப்பட்டன. அக்கிராசனர் வெளியிடங்களிலிருந்து மகாநாட்டுக்கு வரமுடியாமைக்கு வருந்தியும் மகாநாட்டை வாழ்த்தியும் சென்னை பண்டிட் ஆனந்தம் முதலியவர்களால் அனுப்பப்பட்டிருந்த தந்திகளையும் கடிதங்களையும் வாசித்த பிறகு அக்கிராசனர் சுமார் ஒன்றரை மணி நேரம் தமது முகவுரை உபந்யாசம் செய்தார். உடனே மகாநாடு விஷயாலோசனைக்கும் சாப்பாட்டிற்கும் கலைந்தது. சாப்பாடு நடந்ததும் மழை வந்துவிட்டபடியால் மகாநாடு சற்று தாமதித்து 3 மணிக்குக் கூடியது. பந்தலுக்குள் இடம் போதாததால் எதிரிலுள்ள பள்ளிக்கூட மைதானத்தில் கூடியது. சுற்றுப்புற கிராமங்களிலிருந்தும் சேலத்திலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்துகூடிவிட்டார்கள். மறுபடியும்மகாநாடு துவக்கினதும் சிலதீர்மானங்கள் அதாவது செங்கல்பட்டு மகாநாட்டுத் தீர்மானங்களை ஆதரிப்பதாகவும், கிராமங்கள் தோறும்சுயமரியாதை சங்கம் ஏற்படுத்தி பிரசாரம் செய்ய வேண்டும் என்றும்கிராமமாகமதுவிலக்கு தீண்டாமைவிலக்கு யாவருக்கும் கோவில் பிரவேசம் ஆகியவைகளைப்பற்றி பிரசாரம் செய்யவேண்டுமென்றும், இராசிபுரத்திற்கு குடி தண்ணீர் வசதி இல்லாமலிருப்பதால் அரசாங்கத்தார் ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பிறகு திருவாளர்கள் கண்ணப்பர் பொன்னம்பலனார் ஓமலூர் கதிரி செட்டியார் ஆகியவர்கள் உபந்யாசங்கள் நடந்ததும் அக்கிராசனர் முடிவுரைகூற மகாநாடுஇனிது முடிந்தது. உடனே திரு. கண்ணப்பர் சென்னைக்கும் திரு. ஈ, வெ. ராமசாமி திருப்பூருக்குஅடுத்த பொங்கலூருக்கும் பிரயாணமானார்கள்.

ஒரு நிருபர்,

## தஞ்சை பார்ப்பனரல்லாத இளைஞர் கழகம்.

இக்கழக இரண்டாம் ஆண்டு நிறைவு விழா தஞ்சையில் 28-4-29 உயில் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும். திரு. ஈ. வெ. இராமசாமிப் பெரியார் அவர்கள் சொற்பொழி வாற்றுவார்கள். திரு. ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் பானகல் அரசர் உருவப்படத்தைத் திறந்துவைப்பார்கள். என்று திருவாளர் நா. கந்தசாமிப் பிள்ளை அறிவிக்கிறார்.

# திம்மனூர்

# வாலிபர் சன்மார்க்க சங்கம்.

## திரு. அய்யாமுத்துவின் சொற்பொழிவு.

### மக்கள் செயலுக்கு கடவுள் பொறுப்பாளியா?

24—4—29 தேதியில் திம்மனூர் வாலிபர் சன்மார்க்க சங்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில் தலைமை வகித்த கோவை திருவாளர். அ. அய்யாமுத்து அவர்கள் நிகழ்த்திய முன்னுரைச் சொற்பொழிவு:—

நண்பர்களே! இது வாலிபர் சங்கமாதலாலும், யான் எனது வாலிபதசையில் இருப்பதாலும், இச்சங்கத்தில் கலந்து கொள்ள எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டு ஒப்புக் கொண்டேன். வாலிபர்களால் உலகத்தில் சாதிக்கவொண்ணாத காரியங்கள் யாதுமில்லை. வாலிபர்கள் ஜலத்தினுள் இரை தேடிச் செல்லும் மச்சத்தைப் போல் சதா தங்கள் மனதைத்திறந்து வைத்திருந்து அறிவாகிய இரை பிடித்து தங்கள் குறைவாகிய பசியைப் போக்கிக் கொள்பவர்கள். கள்ளங் கபடு அற்றவர்கள். சாதி பேதம் தெரியாதவர்கள். அச்சமென்பதை அறியாதவர்கள். ஊக்கத்தோடு நிற்பவர்கள். தைரியத்தோடு போராடும் வன்மை வாய்ந்தவர்கள். ஒற்றுமையோடு கூடி வாழும் இயல்புடையவர்கள். பொறாமையற்றவர்கள். துவேஷமற்றவர்கள். மறதியற்றவர்கள். உற்சாகமுள்ள மனது படைத்தவர்கள். வெளி வேஷமற்றவர்கள். பாசாங்கு இல்லாதவர்கள். கண்டதைக் கண்டபடி சொல்பவர்கள். கேட்டதைக் கேட்டபடி பேசுபவர்கள். யாருடைய பொல்லாங்கையும் விருப்பு வெறுப்புகளையுங் கவனியாமல் தங்கள் எண்ணங்களை தயங்காது வெளிப்படுத்தும் இயல்புடையவர்கள்.

இவ்வளவு அரும்பெருங்குணங்களமைந்த வாலிபதசையிலிருக்கும் நீங்கள் உங்கள் கண்ணெதிரில் நிற்கும் துன்பங்களைப் போக்கி இன்ப மெய்துமாறு கோருகிறேன். வாழ்வு நிச்சயமற்றது. மூப்பு நம் தலைமேல் நிற்கின்றது, இறந்த பின்னர் நாம் செய்வதையும், செய்யாததையும் அறியும் திறன் படைத்தோமில்லை. மூப்பு வந்தக்கால் நாம் செய்வதொன்றில்லை. வாழ்க்கை இன்பங்களை மறந்து, வாழ்க்கைத் துன்பங்களை மட்டும் கண்முன்நிறுத்தி, களைப்பெய்தி, சோம்பலுற்று, பழையவடுகளைத் திருப்பிக்கொண்டும், பழங்கதைகளைப் பேசிக்கொண்டும், பழமை பழமையென்று பிதற்றிக் கொண்டும், மனமுடைந்து, நம்பிக்கையிழந்து, தாங்களறியாத, தெரியாதவொன்றின் மீது பழி சுமத்திக் கொண்டும் வாளா கிடக்கச் செய்யும் மூப்பு வருமுன்னர், நீங்கள் விரைந்து வெற்றிகொள்ளல் வேண்டும். வாலிபமாகிய உங்கள் பருவகாலத்தில், மனதாகிய உங்கள் பூமியை, ஆண்மை, தைரியம் ஆகிய எருதுகள் பூட்டி அறிவு என்னும் கொழுவு கொண்டு வ உழுது, உண்மை யென்னும் விதை விதைத்து, ஊக்கமென்னும் நீர் பாய்ச்சி, மூட நம்பிக்கை, சோம்பல், இரக்கமின்மையாகிய களைகள் பிடுங்கி அறுவடை காலத்தில் இன்பமாகிய கதிர்களை அறுத்தெடுத்து, அதையனைவருக்கும் சமமாகப்பங்கிவாழ்தல் வேண்டும். இல்லையேல் பருவகாலத்தில் ஆடியலைந்தவன் அறுவடை காலத்தில் ஓலமிடுவது போன்று நீங்கள் உங்கள் முதுமையில் வாடி நிற்க நேரிடும் என்பதை உங்கள் உளத்தில் பதிய வைத்து விடா முயற்சியோடு கூடிப் போராடுங்கள்.

நீங்கள் 'தலைவிதி' என்றும் 'கர்மபலன்' என்றும் வங்கித்திரியும் கிழங்களுக்கு இடங் கொடாதீர்கள். உங்கள் தலைவிதிகளையும், கர்மபலன்களையும் நீங்கள் நினைத்த மாத்திரத்தில் வேறாக்கும் வலிமை உங்களிடம் தான் இருக்கின்றதென்பதை நன்றாய் அறிந்து கொள்ளுங்கள் "அவனன்றியோரணுவுமசையாதெனும் பெரிய ஆப்தர் மொழியொன்று கண்டால், அறிவாவதேது" என்று சொல்வது அர்த்தமற்ற கொள்கையாகும் என்பதைத் திடமாய் நம்புங்கள். உலகத்தில் நடைபெறுங் காரியங்களுக்கெல்லாம் கடவுள் மீது பழி போடுபவர்கள் கடவுள் தன்மையறியாதவர்கள் என்று தயங்காமற் சொல்லுங்கள். கடவுளன்றி உலகத்தில் எக்காரியமும் நடைபெறாதென்று சொல்வதானால் மனிதர்கள் எத்தகைய முயற்சியும் கைக்கொள்ள வேண்டிய அவசியம் எதற்காக? கடவுள் தான் சகலத்துக்கும் பொறுப்பாளி என்றால் தூக்கு மேடைகள் எதற்காக? ஒருவன் மற்றவனால் இம்சிக்கப்படுவதைத் தடுக்க அரசாங்கச்சட்டங்கள் எதற்காக? கடவுள் பொறுப்பாளியாயிருந்தால் உலகத்தில் நடைபெற்ற மகா யுத்தங்களுக்கும், ரத்த வெள்ளங்களுக்கும், எரிமலைகளால் ஏற்படும் ஊர்ச்சேதங்களுக்கும், கடல் கொந்தளிப்பினால் ஏற்படும் கப்பல் மூழ்குதல்களுக்கும், இடிமின்னல்களால் ஏற்படும் பலத்த சேதங்களுக்கும், வெள்ளப்பெருக்கத்தால் ஏற்படும் நாசங்களுக்கும், தொத்து நோய்களால் ஏற்படும் ஜனக் கஷ்டத்திற்கும், மொகலாயர்கள் நமது நாட்டை சூறையாடினதற்கும், ஆங்கில அரசாங்கத்தார் நமது நாட்டை சுரண்டிச் சுரண்டி ஏழ்மையாக்குவதற்கும் என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்? மனிதனுடைய எண்ணங்களின் மீது கடவுளுக்கு ஆதிக்கமிருந்தால் மனிதனுடைய உள்ளத்தில் கெட்ட எண்ணங்கள் தோன்றுவானேன்? மனிதனுடைய செய்கைகளின் மீது கடவுளுக்கு ஆதிக்கமிருந்தால் மனிதன் கெட்ட காரியங்கள் செய்வானேன்? உலகத்தில் காணப்படும் இயற்கைச் சக்திகளான, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஆகாயம், மலை, மழை, இடி, மின்னல், நதிகள், கடல்கள் ஆகியவைகள் கடவுளின் ஆணைப்படி நடப்பதாகில் அவைகளால் உலகத்துக்கு நன்மையேயன்றி தீமைகள் பயப்பானேன்? இவைகளை அடக்கி ஜீவகோடிகளுக்கு தீமையற்ற நன்மையும் இன்பத்தையும் பயிற்றுவிக்க கடவுளுக்குமனமில்லையா? சக்தியில்லையா? மனமில்லையாயின் கடவுள் காருண்யமற்றவர் என்றேற்படுகிறது. சக்தியில்லையாயின் கடவுள் சர்வ சக்தியற்றவர் என்று ஏற்படுகிறது 'கடவுள்' என்ற பதத்துக்கு உள்ளத்தைக் கடந்து நிற்பவர், மனமொழி காயங்களுக்கு எட்டாதவர், காரிய காரணங்களால் அறியப்படாதவர் என்று பொருள் கூறுகிறார்கள். அப்படியிருக்க நம்மால் அறியமுடியாத நிலையில் இருந்து கொண்டு, நாம் செய்யும் காரியங்களுக்கு கடவுள் மீது பழி போடுவது நம்முடைய அறிவை மங்கச் செய்து, நம்முடைய முயற்சியைக்குன்றச் செய்து நம்மை நடைப் பிணங்களாக்கும் என்பதில் ஐயமில்லை என்று சிந்தித்துத் தெளிவீர்களாக. ஆதலால் நாம் செய்யும் காரியங்களுக்கு, சகல பொறுப்பையும் நாமே ஏற்றுக் கொள்ளுதல் அவசியம்.

அளவறியாமல் உண்டவன் அஜீரணத்தால் துன்புறுவது போலவும், அளவு கடந்து நுகர்ச்சி செய்பவன் ஆண்மையிழப்பது போலவும், கணக்கறிந்து வியாபாரம் செய்யாதவன் நஷ்டப்படுவது போலவும், பருவத்தே பயிர் செய்யாதவன் பலனடையாமல் போவது போலவும், இளமையில் சோம்பலுற்றுக்கிடந்தவன் முதுமையில் வறுமையால் பீடிக்கப்படுவது போலவும், நாம் காலாகாலங்களில் ஆய்ந்தோய்ந்து பாராமல் செய்யுங்கர்மங்களின் (காரியங்களின்) பலனை (லாப நஷ்டங்களை) நாமே அனுபவிக்க வேண்டும் என்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? ஆகையால் நாம் இளமையிலிருந்தே ஒவ்வொரு காரியத்தையும் ஆராய்ந்தறிந்து, சீர் தூக்கிப்பார்த்து செய்வோமானால் 'கர்மபலத்'தால் கவலைப்படவேண்டிவராது. நம்முடைய தவறுதல்களால் நமக்கேற்படும் துன்பங்களைக்கண்டு நாம் மனம் சோரலாகாது. தவறுதல்கள் துன்பங்கள் நமக்குவழிகாட்டிகளாகவும், நமக்கு அவசியமாகவுமிருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நமது வாழ்க்கையில் நாம் தவறும் போது, நமது உற்சாகத்தைப் பெருக்கி விடா முயற்சியோடு முன்னேற சமயம் வந்ததாக எண்ணுவோமானால் துன்பம் நமக்கில்லை. ஒரு கயிற்றை இறுக முடியும் ஆற்றல் நமக்கிருக்குமானால், கண்டிப்பாய் அம்முடிப்பைக் கழற்றும் ஆற்றலும் நம்முள் இருக்கிறது. அதையறியாமல், அதை நீக்க வழி தேடாமல் ஐயோ! முடிவிழுந்து விட்ட

(இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

# ஈரோடு ஆலயப் பிரவேசம்.

## வழக்கு விசாரணை.

22—4—29 தேதியில் ஈரோடு ஸ்டேஷனரி சப் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் பகல் 12.30 மணிக்கு ஆலயப் பிரவேச வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதிகள் சார்பில் பிராஸிகியூட்டிங் இன்ஸ்பெக்டரும், பிரதிவாதிகள் சார்பில் நாகை பாரிஸ்டர் திரு கே. சி. சுப்பிரமணியம் அவர்களும் ஆஜராயிருந்தனர். கோர்ட்டினுள்ளும் வெளியிலும் ஏராளமான பொது ஜனங்கள் கூடியிருந்தனர்.

முதல் சாட்சியாக முத்துசாமிக் குருக்கள் கூறியதாவது:—

நான் 4-ந்தேதி இரவு 7 மணிக்கு எல்லாச் சாமிகளுக்கும் கட்டளை பூஜை செய்துவிட்டு இரண்டாவது அதாவது துவாரபாலகர் கதவுக்குச் சமீபம் நின்று கொண்டிருந்தேன்- முதல் பிரதிவாதியான ஈஸ்வரன் என்பவர் தம்முடன் வந்திருப்பவர்களுடன் கோவிலுக்குள் சென்று தாங்களே பூஜை செய்ய வேண்டும் என்று சொன்னார். அப்படிச்செய்வது வழக்கமில்லை என்று சொல்லி தத்தாத்திரி குருக்களை அழைத்துக் கதவைப் பூட்டச் சொல்லி விட்டு நான் அம்மன் கோவிற் கதவைப் பூட்டச் சென்றேன் பின்பு- இருவரும் கதவுகளைப் பூட்டி விட்டு இந்த விஷயம் தெரிவிக்க தருமகர்த்தா வீட்டுக்குப் போனோம். அவர் ஊத்துக்குழிக்குப் போயிருந்தார். பறையர் சக்கிலியா, வள்ளுவர், பள்ளர் முதலியோர் கோவிலுக்குள் வரக்கூடாது- நவக்கிரகத்துக்குக்குருக்கள் தவிர வேறு யாரும்தொட்டுப் பூஜை செய்யக்கூடாது. பஞ்சமர் கோவிலுக்குள் வந்தால் அசுத்தமாகும்- அவர்கள் வரக்கூடாதென்பதற்கு சட்டமில்லை. ஆனால் வரும்வழக்கமில்லை- எதிரிகளைத்தெரியும்- அவர்கள் தேங்காய் பழம் கொண்டு வந்திருந்தார்கள் இவர்கள் அசுத்தம் ஒன்றும் செய்ய வில்லை.

6—4—29 இரவு 7 மணிக்கு தர்மகர்த்தாவிடம் மூவரும் விஷயத்தைச் சொல்லி கும்பாபிஷேகம் செய்தால்தான் பூஜைசெய்வோம் என்று சொன்னோம்.

இரண்டாவது குருக்கள் மேற் சொன்னபடியே சொல்லி விட்டு கூறியதாவது:—

கோவில் ஈரோடு தேவஸ்தானக் கமிட்டிக்கு உட்பட்டது- தர்மகர்த்தா அதன் உத்திரவுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக என்னுடைய அபிப்பிராயம்-விவரமாகத்தெரியாது- கோவில் பிரவேச விஷயமாக உத்திரவு ஏதும் வந்திருப்பதாகத் தெரியாது. கோவிலில் யாரும் இலைபோட்டு சாப்பிட்டது கிடையாது. எதிரிகள் பூஜை செய்தது அபிஷேகம் செய்தது, சாப்பிட்டது. எங்கள் இருவருக்கும் தெரியாது-

குட்டமேனன் கூறியதாவது.—

நான் கோவில் வேலைக்காரன். அன்றைய தினம் 10, 12 பேர் கோவிலுக்குள் வந்தனர். தேங்காய் பழம் வைத்திருந்தனர். இரண்டாங்கதவு பூட்டப் பட்டிருந்தபடியால் கதவின் முன் பக்கம் இரண்டு வரிசையாக உட்கார்ந்து புஸ்தகம் பார்த்துப் பாட்டுப் படித்துக்கொண்டிருந்தார்கள். சுமார் 10 மணிக்கு மேல் பசுபதி என்பவர் நவக்கிரகமுள்ள விடத்தில் புகுந்து சாமிக்குத் தண்ணீர் விட்டு தேங்காய் உடைத்து அங்கு பாடிக் கொண்டிருந்தவர்களுக்கு பிரசாதம் கொடுத்தார்- பிறகு 7, 8 பேருக்குப்போதிய சாதம் வந்தது. அவர்கள் அவ்விடத்திலேயே இலைபோட்டுச் சாப்பிட்டார்கள். அங்கேயே கை அலம்பினார்கள். சிகரெட்டு, பீடிகளை அங்கேயே பிடித்தார்கள். பிறகு விடியற்காலம் 4 மணிக்கு காவேரிக்கு ஸ்நானம்செய்யப் போய்விட்டார்கள்-

தருமகர்த்தா ப, முத்து நாயக்கர் கூறியதாவது:—

நான் இருபது வருஷமாக தருமகர்த்தா வேலை பார்க்கிறேன்- இந்தச்செய்கை நடந்த 4 ந்தேதி ஊத்துக்குழி போயிருந்தேன்- 6 ந்தேதி இரவு 8 மணிக்கு வந்தேன். தத்தாத்திரி குருக்கள் முத்துசாமி ஆகிய இருவரும்வந்து விஷயம் தெரிவித்தார்கள்-நான போலீசாருக்கு ரிப்போர்ட்டுச் செய்தேன்.

வழக்கு 1—5—29 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது- ஒரு நிருபர்.

# கலியாண ரத்து சாஸ்திரீயமானது.

## ஐக்கிய மகாண சமூக மகாநாட்டுத் தீர்மானங்கள்.

ஐக்கிய மாகாண சமூக மகாநாடு 31-3-29 தேதியில் லட்சுமணபுரியில் ஸ்ரீமதி உமா நேரு அவர்கள் தலைமையில் கூடியது.

அப்போது திரு. பண்டித கிருஷ்ண பிரசாத் கால் அவர்கள்

"ஒரு புருஷன் தன் மனைவியை விட்டுப் பிரிந்துவிட்டாலும் அல்லது கொடுமைசெய்தாலும் தம் விவாகத்தை ரத்து செய்து கொள்ள அனுமதிக்கத் தக்கபடி சட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது."

என்ற தீர்மானத்தைப் பிரேரேபிக்கும்போது எந்தப் புதிய இயக்கந்தோன்றினாலும் ஆரம்பத்தில் பல இடையூறுகளும் கூட எதிர்ப்புகளும் குறுக்கிடுகின்றன. இந்தத் தீர்மானம் விதவா விவாகத்தைச் சார்ந்திருக்கிறது. ஒரு பெண் தன் கணவன் இறந்த பிறகு வேறொரு கணவனை மணந்துகொள்ளலாமென்று இந்த மகாநாடு அனுமதிக்குமானால் கணவனை விட்டுப் பிரிக்கப்பட்ட பெண்களும் கணவனால் கொடுமைப்படுத்தப்பட்ட பெண்களும் ஏன் வேறொரு கணவனை மணந்து கொள்ளக் கூடாது? இந்து கலியாணம் தெய்வீகமானது என்று சிலரால் சொல்லப்படுகிறது. அது தெய்வீகமானதானால் ஆண் பெண் இருதிறத்தாருக்கும் ஒரே கட்டுப்பாடு இருக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் ஆண்களை மட்டும் அது கட்டுப்படுத்துவதில்லை.

வேதத்தில் ஒப்பந்தக் கலியாணமுண்டு என்பதாகத் தெரிகிறது. மனுதர்மசாஸ்திரத்தில் 5 காரணங்கள் சொல்லி அவற்றுள் ஏதாவது ஒரு காரணத்திற்காக ஒரு பெண் தன் புருஷனல்லாத வேறு ஒரு புருஷனைக் கலியாணம் செய்துகொள்ளலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. கத்தியாயனரும் வசிஷ்டரும் ஆறு காரணங்கள் கூறி அவற்றுள் ஒரு காரணத்திற்காக வேறு புருஷனைக் கலியாணம் செய்துகொள்ளலாமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விவாக ரத்து என்னும் பதம் சட்ட புத்தகங்களில் உபயோகிக்கப்படவில்லையானாலுங்கூட சட்டப்படி கலியாணத்தைத் தீர்த்துக்கொள்ளுதலும் மறு கலியாணம் செய்துகொள்ளுதலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது என்று கூறினார்.

இத் தீர்மானத்தை ஆமோதிக்கும் முறையில், "இது ஒரு முக்கியமான பிரசினை. ஆண்கள் கொடுமைகளினின்றும் பெண்கள் விடுதலை பெறவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. அறிவும் நாகரிகமும் கொண்ட எல்லாரும் இதை அங்கீகரிப்பார்கள்" என்று திரு, சிந்தாமணி கூறினார்.

"ஒழுக்கமில்லாமை, இரண்டுதாரம், ஒருவரையொருவர் விட்டுப் பிரிதல், கொடுமை" ஆகிய இக் காரணங்களும் ஷை தீர்மானத்தில் சேர்க்கப்படவேண்டுமென்று திரு. சுரேந்திரநாத் வர்மா கொண்டுவந்த திருத்தப் பிரேரேபணையோடு தீர்மானம் நிறைவேறியது.

## திரு- ஈ, வே. ராமசாமியாரின் சுற்றுப் பிரயாணம்,

திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் சனிக்கிழமை இரவு ஈரோட்டினின்றும் புறப்பட்டு 28—4—29 ந் தேதியில் தஞ்சை பார்ப்பனரல்லாத இளைஞர் கழக ஆண்டு விழாவிற்கும் 29, 30 மே 1-ந் தேதிகளில் பொறையாற்றில் நடக்கும் நாடார் மகாநாட்டிற்கும் சென்றுவிட்டு 2—5—29 ந் தேதி வாக்கில் ஈரோடு வந்து சேர்வார்கள்,

## 13 வது நாடார் மகாநாடு

திரு. ஈ. வே. ராமசாமியார் கொடியேற்றுவார்.


நாடார் மகாஜன சங்கம் 13 வது மகாநாடு ஏப்பிரல் 29, 30 மே 1-தேதிகளில் பொறையாற்றில் டபள்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும். திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் கொடியேற்ற விழா நிகழ்த்துவார்கள். சட்ட மெம்பர் கனம் திவான்பகதூர் கிருஷ்ணன் நாயர் அவர்கள் மகாநாட்டைத் திறந்து வைப்பார்கள். மாகாண வாலிப 3 வது மகாநாடு ஸ்ரீமதி மிஸஸ் பி. வி. நற்குணம் அம்மாள் பி. ஏ, தலைமையில் நடைபெறும். இம் மகாநாட்டை செங்கற்பட்டு ஜில்லாபோர்டு தலைவர் திரு. எம். கே. சாமி அவர்கள் திறந்துவைப்பார்கள்.

மாகாணதொண்டர் மாகாநாடு திரு. ஜே. எஸ். கண்ணப்பர் தலைமையில்நடைபெறும்- மிஸ். ஸ்ரீமதி சரோஜினி தேவி அம்மாள் அவர்கள் இம்மகாநாட்டுத் திறப்புவிழா நிகழ்த்துவார்கள் என்று பொதுக்காரியதரிசி அறிவிக்கிறார். பு.சே.

## ஒரு சமாதானம்.

சென்ற வாரத்தில் எதிர் பாராத வண்ணம் மிஷினில் உள்ள இரண்டு பற்கள் சீர்கேடு அடைந்துவிட்டபடியாலும் பத்தாயிரம் பிரதிகள் வரை பதிப்பிக்க வேண்டியிருப்பதாலும் "குடி அரசு" 16 பக்கங்கள் போட வேண்டியதாயிற்று. மிஷினுக்கு வேண்டிய சாமான்களுக்கு சென்னைக்கு எழுதியிருக்கிறோம். மிஷின் ஒழுங்கு படுத்தப்பட்டவுடன் 20 பக்கங்கள் போடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு சுக்ல-ஞு சித்திரை-மீ 16-உ.

## கடவுளும் மதமும் "காப்பாற்றப்பட்டால்" சுயராஜ்யம் வந்துவிடுமா?

சென்னை சட்டசபை இவ்வருஷக்கோடியில் அனேகமாய் கலைக்கப்பட்டுவிடும் என்கின்ற விஷயம் வெளியானதும் பார்ப்பனர்கள் வழக்கம்போல் இப்போதிருந்தே தேர்தல் நாடகம் நடிக்கத் தீர்மானித்து திருவாளர்கள் எஸ். சீனிவாசய்யங்காரும் சத்தியமூர்த்தி முதலிய அவருடைய சிஷ்யர்களும் ஒருபுறமும் ஜனாப்கள் பஷீர் அகமது, அமீத்கான், ஷாபி மகமது ஆகியவர்கள் ஒருபுறமும் திருவாளர்கள் குழந்தை, ஜயவேலு, அண்ணாமலை, பாவலர், கல்யாணசுந்தர முதலியார் ஆகியவர்கள் ஒரு புறமும் கிளம்பி இப்பொழுதிருந்தே ஊர் ஊராய்ச் சுற்றி தெருக்கூத்தாடிகள் போல தேர்தல்நாடகம் ஆடத்தொடங்கிவிட்டார்கள். இந்தக்கூட்டத்தார் சென்ற தேர்தல்கள் வரையில் பாமரமக்களிடம் தாங்கள் சுயராஜ்யம் வாங்கிக்கொடுப்பதற்காகப் பாடுபடுவதாயும், பார்ப்பனரல்லாதார் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சியார் சுயராஜ்யத்துக்கு விரோதமாயிருப்பதாகவும், ஆதலால் அவர்களுக்கு ஓட்டுக்கொடுக்காமல காங்கிரஸ்காரர்களாகிய தங்களுக்கே ஓட்டுக்கொடுத்து தங்களையே சட்டசபைக்கு அனுப்பவேண்டும் என்றும் சொல்லி வந்தார்கள். ஆனால் சுயராஜ்யப்புரட்டுகள் முழுவதும் இப்போது பொது ஜனங்களுக்கு வெட்ட வெளிச்சம் போல் வெளிப்பட்டுப் போனவுடன் இப்போது பாராஜ்ஜியம் அதாவது மோக்ஷராஜ்ஜியம் வாங்கிக்கொடுக்கப்போவதாகவும் அதற்கு ஜஸ்டிஸ் கக்ஷியார் விரோதமாயிருந்து கொண்டு சாமியையும் மதத்தையும் வைகின்றார்கள் என்றும், ஆதலால் தாங்கள் கடவுளையும் மதத்தையும் காப்பாற்ற சட்டசபைக்கு போகவேண்டியிருப்பதாகவும், அந்தப்படி தங்களை சட்டசபைக்கு அனுப்பினால்தான் கடவுளும் மதமும் காக்கப்பட்டு மக்களுக்கு பராஜ்ஜியமாகிய மோக்ஷ ராஜ்ஜியம் கிடைக்குமென்றும் பேசி ஓட்டுக்கேட்டு வருகின்றார்கள். இந்தமாதிரி ஓட்டுவேட்டையைப்பார்ப்பனர்கள் தங்களை வெளியில் காட்டிக்கொள்ளாமல், சிலகூலிகளை மாத்திரம் ஏவிவிட்டு அவர்கள் கடவுளையும், மதத்தையும், காப்பாற்றுவதுபோல் வேஷம் போட்டு ஜஸ்டிஸ் கட்சியைவைது கொண்டே இருக்கும்படி செய்து, அதனால் தங்களுக்கு ஓட்டுக் கிடைக்கும்படிசெய்துபார்த்தார்கள். ஆனால்நாம் ஆரம்பத்திலேயே இதன் இரகசியத்தைத்தெரிந்து "இது அய்யங்கார் கூலிப்பிரசாரமேதவிர இதில் கடவுளைக் காப்பாற்றக் கவலைகொண்ட பிரசாரம் ஒன்றும் இல்லை, அய்யங்காரைக் காப்பாற்ற அவர்களது கூலிகள் சென்ற தேர்தலில் சுயராஜ்யப் பிரசாரம் செய்ததுபோல் இந்த தேர்தலுக்கு மோக்ஷ ராஜ்ஜியப்பிரசாரம்செய்கின்றார்கள்" என்று சொன்னோம். இதற்கு அக்கூலிகள் தங்களது மோக்ஷ ராஜ்ஜியப் பிரசாரத்திற்கும் அய்யங்காருக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று சொல்லிக்கொண்டே வந்தார்கள். ஆனால் சமீபத்தில் திரு. சீனிவாசய்யங்கார் வாயாலேயே இதன் உண்மை தாராளமாய் வெளியாய் விட்டது.

அதாவது சமீபத்தில் திரு. எஸ். சீனிவாசய்யங்காரும் அவர்களது வால்களும் கூலிகளும் கடலூர் கும்பகோணம் முதலிய இடங்களுக்குச் சென்று அங்கு நடத்திய தேர்தல் கூத்துக்களில் ராமசாமி நாயக்கர் கடவுளையும் மதத்தையும் கோவில்களையும் குற்றம் சொல்லுகின்றார், ஜஸ்டிஸ் கக்ஷியார்கள் அவரை ஆதரிக்கின்றார்கள், ஆதலால் ஜஸ்டிஸ் கக்ஷியாரை சட்டசபைக்கு அனுப்பாதீர்கள் என்று சொல்லி இருக்கின்றார். எனவே அய்யங்கார் சங்கமும் "ஆஸ்திக" சங்கமும் ஒரே உட்கருத்தைக் கொண்டுதான் வேலை செய்கின்றன என்பதும் அய்யங்கார்கள் தங்களுக்கு ஓட்டுக் கிடைக்க வேண்டி கடவுளையும் மதத்தையும் காப்பாற்ற முற்பட்டால் அவர்களது கூலிகள் வயிற்றுப் பிழைப்புக்கு கூலி கிடைக்க கடவுளையும் மதத்தையும் காப்பாற்றப் புறப்பட்டிருப்பதாய்ச்சொல்லிக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றார்கள் என்பதும் விளங்கவில்லையா? எனவே இந்த தேர்தல் நாடகத்திற்குப் பயந்து ஜஸ்டிஸ் கக்ஷி பிரமுகர்களில் சிலர் நம்மிடம் வந்து சுயமரியாதை இயக்க தத்துவத்தை அய்யங்கார் கூலிகள் திரித்துக் கூறுவதன் மூலம் தங்களுக்கு ஓட்டுக்கிடைக்காமல் போய்விடுமோ எனப்பயந்து சற்று அதை நிறுத்திவைக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். நாம் அதற்கு சொன்னபதில் என்னவென்றால் ஜஸ்டிஸ் கட்சியாருக்கு ஓட்டு கிடைப்பதே நமது லட்சியமல்லவென்றும், நமது கொள்கைகள் நிலைபெற்று அவைகள் அமுலில் வரவேண்டியதே நமது கவலை என்றும், இக்கொள்கைகளை ஒப்புக்கொள்ளும் முறையிலும் நடத்தி வைக்கச் சம்மதிக்கும் முறையிலும் தான் ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுக்கிடைக்க நாம் ஆசைப்படுவோமே ஒழிய பெயரளவில் எக்கட்சியையும் பற்றி நமக்கு அதிக கவலை இல்லை என்றும், சுயமரியாதை இயக்க தத்துவத்தைப் பற்றி பார்ப்பனர்கள் கூலிகளைப் பிடித்து திரித்துக்கூறி விஷமப் பிரசாரம்செய்து ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டில்லாமல் செய்துவிடுவார்களே என்று உண்மையாகவே உங்களுக்கு பயமிருக்குமானால் அதே கூலிகளைப்பிடித்து மேலால் நாலோ, ஐந்தோ சேர்த்துக் கொடுத்து அவர்களைக் கொண்டே அய்யங்கார்களின் யோக்கியதையை வெளியாக்கும் உண்மைப் பிரசாரம் செய்விக்க நீங்கள் ஏன் முயற்சிக்கக் கூடாது? என்றும், நீங்களும் வெளி இடங்களுக்குச் சென்று ஜனங்களுக்கு ஏன் உண்மையை எடுத்துக்கூறக் கூடாது என்றும் தான் நாம் மறு மொழி சொன்னோம். அதன் மீது அவர்களும் பிரசாரத்திற்குக் கிளம்புவதாகத் தெரிகின்றது. எனவே நம்மைப் பொறுத்தவரை நம்மை எவர் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் குற்றம் கூறிப்பிரசாரம் செய்வதைப் பற்றி நமக்கு பயமில்லை. அன்றியும் நமக்கு ஓட்டுக் கிடைக்காமல் போவதால் பெரியநஷ்டம் ஒன்றும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. நம்மை எவ்வளவு பெரிய நாஸ்திகர் என்று அழைத்தாலும் கவலை இல்லை. ஒருகாரியத்தில் இறங்கினால் அதன் எதிரிகளால் சொல்லப்படும் பழிகளை ஏற்கவும் அவைகளுக்கு சமாதானம் சொல்லி சமாளிக்கவும் அதற்கு உயிர் கொடுக்கவும் சக்தி இல்லாதவர்கள் பெரிய காரியங்களைச் சாதித்துவிடலாம் என்று எண்ணுவது பைத்தியக்காரத்தனமாகும். ஆதலால் எவ்வளவு பழிப்புகள் வந்தாலும் சமாதானம் சொல்ல அவைகளை மனதார வரவேற்கின்றோம்.

ஏனெனில் நமது நாட்டு நிலைமைக்கு நாம் கொண்டிருக்கும் கடவுள் உணர்ச்சியும் சிறப்பாக பார்ப்பனரல்லாதார் இருந்துவரும் இழி நிலைக்கு அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் மத தத்துவங்களுமே காரணம் என்பதை நாம் ஒரு காலமும் மாற்றிக்கொள்ளப்போவதில்லை என்பதையும், அவ்விரண்டையும் தலைகீழாக மாற்றி அவற்றின் உண்மையை வெளியாக்குவதையே நமது முக்கிய கடமையாய்க் கொண்டிருக்கின்றோம் என்பதையும் அழுத்தமாக வலியுறுத்துகின்றோம். இதனால நமக்கு எவ்வளவு பெரிய நாஸ்திகப்பட்டம் வருவதானாலும் எவ்வளவு காலம் மீளாத 'நரகம்' ஏற்படுவதானாலும் அன்றியும் அதனால் அகாலத்தில் உயிர்போவதானாலும் ஒரு சிறிதும் கவலை இல்லை. மற்ற நாட்டினர்களின் கடவுள் உணர்

ச்சியைவிட நமது கடவுள் உணர்ச்சியும் பக்தியும் பூசையும் நம்மை ஒட்டாண்டிகளாக்கி அறிவிலிகளாக்கி நம்மை நமது நாட்டைவிட்டுத் துரத்திக் கொண்டுவருகின்றது. அது போலவே மற்ற நாட்டினர்கள் மதத்தைவிட நமது மதம் நம்மைபிரித்துவைத்து இழிமக்களாக்கி அன்னிய ஆட்சிக்குஉட்படுத்தி மனிதத்தன்மை இல்லாமல் வாழச்செய்கின்றது. இவை நேற்று இன்று என்றில்லாமல் ஆராய்ச்சிக்கு எட்டும் சரித்திரகாலம் தொட்டு இப்படியே இருப்பதாய்க் காணப்படுகின்றது. இதற்கு, அர்த்தமில்லாமல் வெள்ளைக்காரர்கள் மீது பழி போடுவதிலும் சுயராஜ்ஜியச் சாக்கு சொல்லுவதிலும் பயன் என்ன? என்று தான் கேட்கின்றோம். ஏனெனில் சுயராஜ்ஜியமும் அதற்கும் மேற்பட்ட ராமராஜ்ஜியம் கிருஷ்ண ராஜ்ஜியம் முதலிய ராஜ்ஜியங்களும் இருந்த காலத்தில் இருந்த நிலையைவிட வெள்ளைக்காரன் ராஜ்ஜிய காலம் எப்படி இந்நிலைக்கு அதிகமான பொறுப்புடையது என்பது தான்.

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களைத் தெருவில் நடக்கவிடாதது ஆப்பிரிக்கர்களுடைய அகம்பாவமாக இருக்கலாம். அமெரிக்காவில் கவி ரவீந்திரநாத் தாகூர் அவர்களை அவமரியாதை செய்தது அமெரிக்கர்களுடைய ஆணவமாக இருக்கலாம். திரு காந்தியை கண்டித்தது இங்கிலீஷாருடைய இறுமாப்பாக இருக்கலாம். ஆனால் இந்தியனை இந்தியாவில் தெருவில் நடக்க விடாததும் இந்துக்கடவுள் கோவிலுக்குள் செல்ல இந்துவை விடாததும் யாருடைய அகம்பாவம், ஆணவம், இறுமாப்பு என்று கேட்கின்றோம்.

திருவாளர்கள். காந்தியும் லஜபதியும் கோவிலுக்குள் சென்று அவர்களது கடவுளை வணங்க அநுமதிக்காமல் திருப்பி அனுப்பிய கொடுமையையும் அவமானத்தையும் இழிவையும் விடவா திரு. தாகூரை அமெரிக்கர்கள் அவமானப்படுத்தி விட்டார்கள் என்று யோசித்தால் இந்தியர்கள் அயோக்கியர்களா முட்டாள்களா என்பதும், அமெரிக்கர்கள் அயோக்கியர்களா முட்டாள்களா என்பதும், இந்திய அரசர்கள் ஆட்சி ஐரோப்பிய அரசர்கள் ஆட்சியைவிட மேலானதாயிருக்குமா என்பதும் விளங்காமல் போகாது. எந்த நாட்டிலாவது குளத்தில் தண்ணீர் மொள்ள உரிமையில்லாதவனும் தெருவில் நடக்க உரிமையில்லாதவனும் தங்களது உரிமையை மறுக்கின்றவர்களுடன் சேர்ந்து சுயராஜ்யம் அடைய முயற்சிப்பார்களா என்று யோசித்துப் பார்த்தால் சுயராஜ்ஜியத்திற்கு யார் முட்டுக்கட்டை போடுகின்றார்கள் என்கின்ற உண்மை ஒரு மூடனுக்கும் விளங்காமல் போகாது. கடவுளையும்மதத்தையும் கோவில்களையும் காப்பாற்றுகின்றோம் என்று வேஷம் போட்டுக் கொண்டு ஜஸ்டிஸ்கட்சியை ஒழித்துப்பார்ப்பனக்கட்சியை சாதிக்கப் போவதாக வெளி வந்திருக்கும் ஆஸ்திக கனவான்கள் கடவுள் பேராலும் மதத்தின்பேராலும் கோவில்களின் பேராலும் நடக்கும் கொடுமைகளை ஒழிப்பதற்குவதாவது செய்கின்றார்களா நினைக்கின்றார்களா செய்தார்களா நினைத்தார்களா என்றுதான் கேட்கின்றோம். எனவே பார்ப்பனர்கள் தேர்தலுக்கு ஏற்படுத்திக் கொண்ட நாடகத்தில் வரும் வேஷங்களைக் கவனிக்காமல் அந்த வேஷக்காரர்கள் யார்? அவர்களின் அறிவு, ஒழுக்கம், லக்ஷியம் பிழைப்பு யோக்கியதை ஆகியவைகள் என்ன? என்பதைப் பற்றி விசாரித்தால் கண்டிப்பாய் ஒவ்வொருவருக்கும் அவர்கள் கூற்றின் உண்மை விளங்காமல் போகாது.

## இந்திய சட்டசபை வர்த்தகத் தொகுதிக்குத் தேர்தல்.

இந்தியா சட்டசபைக்கு சென்னை வர்த்தகத் தொகுதிக்காக ஒதுக்கப்பட்ட ஸ்தானத்திற்கு கோவை வருணாச்சிரம ஐயங்கார் பார்ப்பனராகிய திரு. சி. வி. வெங்கிட்டராமண ஐயங்கார் அவர்களும் சென்னை பிரபல வியாபாரியாகிய ஜனுப் ஜமால் மகமது சாயபு அவர்களும் போட்டி போடுகின்றார்கள். திரு. அய்யங்காருக்கு அதிகமான பின்பலமும் ஆதரவும் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களால் இருப்பதாகத் தெரியவருகின்றது. இத் தொகுதியில் சுமார் 500பேர் வரை நாட்டுக்கோட்டை நகரத்தார்கனவான்கள் ஓட்டர்களாயிருப்பதும் ராஜா சர். அவர்கள் வர்த்தக உலகத்தில் தக்க செல்வாக்குடையவராக இருப்பதுமே திரு. அய்யங்கார் அவரைப் போய் பிடித்ததற்கு முக்கிய காரணமாகும். திரு. ராஜா சர். அவர்களின் செல்வப் பெருக்கும் செல்வாக்கு வன்மையும் உலகத்தில் யாராலும் மறுக்கக் கூடியதல்ல என்பதை நாம் வலியுறுத்திக் கூறுவோம். ஆனால் அதை மக்களுக்குப் பயன்படும் முறையில் உபயோகப்படுத்தாமல் எதேச்சாதிகார வழியில் உபயோகிக்கத் துணிந்துகொண்டே போனால் யாரால்தான் சங்கடப்படாமல் இருக்க முடியும்? அவர்களது சிதம்பரம் காலேஜ் பார்ப்பன அக்கிராரமாயிருக்கின்றது என்று கொஞ்சகாலத்திற்கு முன் எழுதினோம். அதை ஒருவாறு வேறு அவசரத்தில் மறந்தோம். பிறகு சிதம்பரம் யூனிவர்சிட்டிக்கு வைஸ் சான்சலராக பார்ப்பனப்பித்துப் பிடித்த ஒரு சாஸ்திரியை நியமித்தார்கள். போதாக்குறைக்கு சட்ட சபை வர்த்தகத் தொகுதிக்கு ஒரு பிரபல வர்த்தகருக்கு விரோதமாய் அதுவும் மகமதிய வர்த்தகருக்கு விரோதமாய் ஒரு பார்ப்பனரை அதுவும் அய்யங்கார் பார்ப்பனரை அதுவும் ஏற்கனவே எல்லோரும் அய்யங்கார் பார்ப்பனராக அடைத்துகிடக்கும் இடத்திற்கு மறுபடியும் ஒரு வருணாச்சிரம அய்யங்கார் பார்ப்பனரை ஆதரிப்பது என்று சொன்னால் நாம் எப்படித்தான் சமாதானமடையமுடியும்? எனவே நமது ராஜா சர், அண்ணாமலை செட்டியார் அவர்கள் தயவுசெய்து புனராலோசனை செய்து தம்மிடம் அன்பும் நம்பிக்கையும் கொண்டிருக்கும் மக்களுக்கு நியாயம் வழங்குவார்களாக.

## பாராட்டுதல்.

திருவாளர் சென்னை பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களை சென்னை கார்ப்பரேஷன் அங்கத்தினராக நியமித்த அரசாங்க ஸ்தல ஸ்தாபன மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களை நாம் மனமார பாராட்டுவதுடன் நமது வேண்டுகோளுக்கு செவிசாய்த்தமைக்கு நமது நன்றியறிதலையும் செலுத்துகின்றோம். வெகு காலத்திற்கு முன்னமேயே இந் நியமனம் பெற்றிருக்கவேண்டிய பண்டிதர் ஆனந்தம் இப்பொழுதாவது நியமனம் பெற்றிருப்பதற்கு மகிழ்ச்சியடைவதுடன் மேலுக்கு மேலும் உயர் பதவி நியமனம் பெற்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழைக்கவேண்டுமாய் ஆசைப்படுகின்றோம்,

### ம. ரா. குமாரசாமி பிள்ளை

தமிழறிஞரும் பரமரசிகமாகச் சொற்பொழிவாற்றும் ஆற்றல் வாய்ந்தவருமான திரு. ம. ரா. குமாரசாமி பிள்ளை அவர்கள் திருக்கோவலூர் வைத்திய சாலையில் சிகிச்சையிலிருந்து 24-4-29 உ காலை காலஞ்சென்றமை கேட்டு வருந்துகின்றோம். அவரது பிரிவாற்றாமைக்கு வருந்தும் அவருடைய குடும்பத்தாருக்கு எமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## இந்திய சட்ட சபைத் தேர்தல்

### ஜனுப் ஜமால் முகம்மதுவுக்கு ஆதரவு.

கோயம்புத்தூர் முனிசிபல் உபதலைவர் திரு. வி. அருணாசலம் செட்டியார் எப். எம். யு., கோவை முனிசிபல் கவுன்சிலரும் மிராஸ்தாருமான திரு சி. வி. வி. சுப்பைய செட்டியார், இந்திய கமர்சியல் பேங்கின் காரியதரிசி திரு வி. பழனிசாமி நாயுடு ஆகிய மூன்று கனவான்களும் நமக்குப் பின்வருமாறு தெரிவித்திருக்கின்றனர்.

சென்னை வியாபாரத் தொகுதியிலிருந்து இந்திய சட்டசபை பிரதிநிதிஸ்தானத்துக்கு அபேட்சகராக நிற்கும் திரு. சி. வி. வெங்கட்டரமண ஐய்யங்காரை ஆதரித்து நாங்கள் ஒரு அறிக்கையில் கையெழுத்து இட்டிருக்கிறோம். அந்த அறிக்கையில் நாங்கள் கையெழுத்துச் செய்தபோது வர்த்தகத் தொகுதியில் வேறு தகுதியுள்ள அபேட்சகர் எவரும் நிற்கப்போவதாக எங்களுக்குத் தெரியாது. ஆனால் இப்போது ஜனுப் ஜமால் முகம்மது அந்தஸ்தானத்தில் அபேட்சகராய் நிற்பதாக நாங்கள் அறிகிறோம். எனவே சென்னை வர்த்தகத் தொகுதிக்கு இந்திய சட்டசபையில் ஒரு மாஜி வக்கீல் பிரதிநிதியாயிருப்பதைவிட உண்மையான ஒரு வியாபாரி பிரதிநிதியாயிருப்பதே நியாயமும் பொருத்தமும் ஆகும். ஜனுப் ஜமால் மகம்மதுவுக்குப் போட்டியாய் நில்லாமல் விலகிக்கொள்ளும்படி திரு. சி. வி. வெங்கட்டரமண ஐயங்காரை அவருடைய நண்பர்கள் வற்புறுத்துவார்கள் என்று நம்புகிறோம். சென்னை வர்த்தகத்தொகுதியாளர் ஜனுப் ஜமால் முகம்மது போன்ற வியாபாரத்தலைவரை ஆதரிக்காவிட்டால் அவர்கள் தங்களுக்கே கேடு செய்தவர்களாவார்கள்.

## ஈரோட்டில் பாரிஸ்டர் K. C. சுப்பிரமணியம். சுயமரியாதைச் சங்க வரவேற்பு.

ஈரோடு கோயில் நுழைவு வழக்கை நடாத்த 22-4-29 உயில் இங்கு விஜயம் செய்திருந்த நாகை உயர் திருவாளர் K. C. சுப்பிரமணியம் பார்-அட்-லா அவர்களைப் பாராட்டும் பொருட்டு திரு ஈ. வெ. இராமசாமியாரின் மாளிகை மேல்மாடியில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. மழையாக இருந்தும் ஏராளமான பொது ஜனங்கள் வந்திருந்தனர்.

திரு. வெங்கடாசலம் அவர்கள் பிரேரேபிக்க ஈரோடு முனிசிபல் கௌன்சிலரும் பஞ்சாயத்துக் கோர்ட்டு பிரசிடெண்டுமான திருவாளர் சிக்கைய நாயக்கர் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. குருசாமி அவர்கள், பாரிஸ்டர் சுப்பிரமணியம் அவர்கள் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்திற்காகச் செய்திருக்கும் தியாகத்தையும், தஞ்சை ஜில்லாவில் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு அவர்கள் உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் புரிந்து வரும் ஊழியத்தையும், கல்விப் பெருமையையும், பரம்பரையாக கௌரவம் வாய்ந்த அவரது குடும்பப்பெருமையையும் விரிவாக எடுத்துக்கூறினார்கள். பின்னர் சுயமரியாதைச்சங்க ஆதரவில் பாரிஸ்டர் சுப்பிரமணியம் அவர்கட்கு திரு. வி. ராமசாமி அவர்களால்ஒருவரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டு அவருக்கும் அக்கிராசனருக்கும் மாலைகள் சூட்டப்பட்டன. திரு சுப்பிரமணியம் அவர்கள் "மேனாட்டு நிலையும் சுயமரியாதை இயக்கமும்" என்னும் பொருள் பற்றி சுமார் ஒருமணி நேரம் தெளிவாகவும் உருக்கமாகவும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் திரு. எஸ். வி. லிங்கம் அவர்கள் திரு. சுப்பிரமணியம் அவர்களின் ஊழியத்தைப் பாராட்டிப் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பிறகு திரு. சி. நடராஜன் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 8-30 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

திரு. பாரிஸ்டர் சுப்பிரமணியம் அவர்கள் அன்று இரவு 10 மணிவண்டியில் நாகைக்குப் பிரயாணமானார்.

### பாரிஸ்டர் K. C. சுப்பிரமணியம் அவர்கட்கு ஈரோடு சுயமரியாதைச் சங்கத்தார் அளித்த வரவேற்புப்பத்திரம்

மதிநுட்பஞ்சான்ற மாண்புடை அண்ணலே!

நினது வரவு நல்வரவாகுக. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பார்ப்பனர்கள் "அறிவுத் துறைக்குரியார் யாங்களே" என்று ஏமாற்றி நமது மக்களைப் பல விதத்திலும் முன்னேறவிடாமல் தாழ்த்தி அரசியல் துறையில் அரசாங்க உத்தியோகங்கள் எல்லாவற்றையும்தாங்களே ஆக்கிரமித்துக்கொண்டு அதன் சலுகையால் நியாயவாதத் திறமையிலும் அவர்களுக்கு ஒப்பானவர் இல்லை என்று பொது மக்கள் நினைக்கும்படியான நிலையை ஏற்படுத்தி இறுமாந்து திரிந்த அந்தச் சுயநலக் குழுவினர் வெட்கித் தலைகுனியும்படியான முறையில் கூரிய மதியால் நியாயத்தை வாதிக்கும் தீரனே! வருக! வருக!!

சேனைத்தலைவர்குலப் பெருமணியே!

பொருளற்ற வழக்கவொழுக்கங்கள், ஜாதிசமய வேற்றுமைகள் ஆகிய இருட் பெருங்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் தமிழ் மக்களைக் கரையேற்றும் தெப்பமே! சுயமரியாதை இயக்கத்தந்தையாம் நமது மாபெருந் தலைவர் ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் பிறப்பிடமாகி விளங்கும் ஈரோடு மாநகரில் சுயமரியாதை வீரனாகிய நின்னை வரவேற்கும் பேறு பெற்றமைக்கு யாங்கள் எல்லையற்ற மகிழ்ச்சிப் பெருக்கடைகின்றோம்.

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளா!

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளைக் காத்துச்சமதருமத்தை நிலை நிறுத்த இங்கு நிகழ்த்திய கோயில் நுழைவுப்போர் காரணமாக ஏற்பட்ட வழக்கை நடாத்த கைம்மாறு கருதாமலும் தேக சிரமம் பாராட்டாமலும் நெடுந்தூரத்திலிருந்து வந்து இங்கு எழுந்தருளிய இச்சந்தர்ப்பத்தில் எங்கட்கு வேண்டிய நல்லுபதேசங்கள் செய்ய ஒப்புக்கொண்ட பெருந்தகை வள்ளலே! நின்னை அன்புடன் வரவேற்கின்றோம்.

## பொங்கலூர் பழைய மாணவர்சங்க ஆண்டுவிழா.

23—4—29-ந் தேதி பகல் 3-மணிக்கு பொங்கலூர் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் பழைய மாணவர் சங்க இரண்டாவது ஆண்டு விழா பள்ளிக்கூட மைதானத்தில் போடப்பட்ட ஒரு தனிக்கொட்டகையில் திருவாளர் கோவை ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். எம். எல். சி. அவர்கள் தலைமையின் கீழ் நடந்தது. கூட்டத்திற்குப் பெண்களும் ஆண்களுமாகச் சுமார் ஆயிரம் பேர்கள்வரை வந்திருந்தார்கள். திரு. ஷண்முகம் அவர்கள் 2-மணிக்கு கோவையில் இருந்து திரு. பழனிச்சாமி அவர்களுடன் மோட்டாரில் வந்து சேர்ந்தவுடன் மேளவாத்தியங்களுடன் வரவேற்று பந்தலுக்கழைத்துச் சென்று அவர்களை அக்கிராசனராகப் பிரேரேபிக்க திரு. ஷண்முகம் அவர்கள் அக்கிராசனத்தமர்ந்ததும் கடவுள் வாழ்த்துக் கூறி திருவாளாகள் ஆர். கே. ஷண்முகம், ஈ. வெ. ராமசாமி ஆகிய இருவர்களுக்கும் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு அக்கிராசனர் முகவுரையாகக் கல்வியைப்பற்றியும் பள்ளிக்கூடத்தைப் பற்றியும் மாணவர் கடமையைப் பற்றியும் சுயமரியாதைத் தத்துவத்தைப் பற்றியும் தெளிவாகப் பேசி அமர்ந்தவுடன் காரியதரிசியால் அறிக்கைப் பத்திரம் வாசிக்கப்பட்டு திருவாளர் கே. பழனிசாமி அவர்களால் பெண்கல்வி என்பதைப்பற்றி ஒரு உபந்யாசம் படிக்கப்பட்டது. பிறகு திரு. ஈ. வெ. ராமசாமியாரால் சுயமரியாதை இயக்கமும் அதன் தத்துவங்களும் என்பதுபற்றி இரண்டு மணி நேரம் பேசப்பட்டுபள்ளிக்கூடத்தின் அவசியத்தைப்பற்றியும் அதை எல்லோரும் ஆதரிக்கவேண்டியதைப் பற்றியும் பேசியபிறகு அக்கிராசனர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது. ஒரு நிருபர்.

## எஸ். டி. என். பி. யோகத்தின் 26-வது ஆண்டு விழா,

### சுயமரியாதை மகாநாட்டில் திரு. ஈ. வெ. ராமசாமி தலைமைவகிப்பார்.

### ஆலயப்பிரவேச மகாநாட்டில் திரு. மாளவியா தலைமைவகிப்பார்.

மலையாளம் தீயர்களின் முக்கியமான ஸ்தாபனமான எஸ். டி. என். பி. யோகத்தின் 26-வது ஆண்டுவிழா கோட்டயத்தில் மைசூர் சமஸ்தான ரிட்டையர்ட் சுகாதார கமிஷனர் டாக்டர் பி. பால்பு அவர்களின் தலைமையின் கீழ் மே மாதம் 6, 7, 8 தேதிகளில் நடத்த விமரிசையான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. அவ்வாரத்தில் நடைபெறும் சுயமரியாதை மகாநாட்டிற்கு உயர் திரு. ஈ. வெ. இராமசாமி தலைமை வகிப்பார். ஆலயப் பிரவேச மகாநாட்டிற்கு பண்டிட் மாளவியா தலைமை வகிப்பார், மாதர் மகாநாட்டில் ஸ்ரீ கௌரி அம்மா தலைமை வகிப்பார்.

## 'பகுத்தறிவு' நேயர்கள் கவனிக்க

சுக்கில வருஷம் சித்திரை மாதம் முதற்கொண்டு "பகுத்தறிவு" என்ற மாதப் பத்திரிகை தொடங்கப்பெறும் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருப்பது நேயர்களுக்குத் தெரியும். இதுவரை ஆயிரத்நக்கு மேற்பட்ட சந்தாதாராகள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். நமது காரியாலயத்திலுள்ள மிஷினில் இரண்டு பற்கள் சீர்கேடு அடைந்துவிட்டபடியால் மிஷினை மெதுவாகச் செலுத்தி "குடி அரசு" பத்திரிகைகூட 16 பக்கங்களை போடவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. மிஷினுக்கு வேண்டிய சாமான்களுக்கு சென்னைக்கு எழுதியிருக்கிறோம். வேறு புதிய இயந்திரமும் கூடிய விரைவில் வந்துவிடும். வந்தவுடனே தவறாமல் "பகுத்தறிவு" ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நேயர்கள் மேன்மேலும் ஆதரவளித்து வருவார்களாக.

இங்ஙனம்,
மானேஜர்.

## ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1929-௵ O. S. No. 105.

| | |
|---|---|
| பாவாயி அம்மாள், 1. <br> சென்னிமலைக் கவுண்டன் 2. | வாதிகள். |
| தங்கமுத்துக் கவுண்டன் 1- <br> சுப்பராயக் கவுண்டன் 2. | பிரதிவாதிகள். |

டி நெம்பர் பிரதிவாதிகளுக்கு.

வாதிகளுக்காக வக்கீல் E. V. நஞ்சப்ப செட்டியார் தெரிவிப்ப தென்னவெனில்.

டி நெம்பரில் வாதிகள் உங்கள் பேரில் பிராமிசரி நோட்டுப்படி ரூ 600. கிடைக்க வேணுமாய் தாவா செய்து கடைசியாக 6-6-29 உ வாய்தா போட்டிருக்கிறது. டி தேதியில் நீங்கள் நேரில் ஆஜராகாவிடில் ஒரு பக்கமாய் தீர்மானிக்கப்படும்.

ஈரோடு. 27-4-29 } E. V. நஞ்சப்ப செட்டியார், வாதிவக்கீல்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தே ஐயோ! முடிந்த துன்பம் சகிக்க முடியவில்லையே. ஐயோ தலைவிதியே! ஐயோ கர்மபலனே! ஐயோ ஆண்டவனே! கண்ணற்றவனே, காதற்றவனே, இரக்கமற்றவனே, விதியே, விதியே என்று அலறி விழுவீர்களானால் உங்களால் உங்களுக்கும் உங்களால் மற்றவர்களுக்கும் என்ன பிரயோஜனம் விளைவிக்கப் போகிறீர்கள்? ஆதலால் அன்பர்களே! நீங்கள் வீணாகக் கடவுளின் மீது பழிபோட்டு, உங்கள் அறிவையும், முயற்சியையும், திறனையும் மங்கச்செய்யாமல், உங்கள் துன்பங்களோடு நீங்கள் தலைநிமிர்ந்து போராடுங்கள். இப்போராட்டத்திற்கு வாலிபகாலமே ஏற்றதாதலால், காலத்தை வீணாக்காமல் பயன் படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்குள் அபாரமான சக்தி வாய்க்கப் பெற்றிருக்கிறீர்கள். அதை அறிந்து கொள்ளுங்கள். அறியாமை, மூடபழக்க வழக்கங்கள் என்ற திரை மறைவினுள் நீங்கள் நிற்கின்றீர்கள். அத்திரையைத் துண்டு துண்டாய்க் கிழித்தெறிந்து வெளிவாருங்கள். நீங்கள் தன்னம்பிக்கை கொண்டு போர் புரியுங்கள். அப்போது கடவுள் சக்தி தானாகவே உங்களுக்குத் தெரியவரும்.

எனதன்பைக்கவர்ந்த நண்பர்களே! இதுகாறும் வாலிபத்தின் பெருமையையும் வாலிப தசையில் சாதிக்க வல்ல காரியங்களையும் எடுத்துரைத்தேன். இனி நீங்கள் மேற்கொண்டிருக்கும் சன்மார்க்கத்தைக் குறித்து சிலவார்த்தைகள்கூறுகிறேன். யான் கள்ளங்கபடமற்ற வாலிபன். உள்ளதை யுள்ளவாறு-என் மனதிற்கு பட்டவாறு பேசுவேன். யான் கூறுபவைகள் உங்கள் எண்ணங்களுக்கு பொருத்த மற்றவையாயின் உதறித்தள்ளி விடுங்கள். ஆனால் எதொன்றையும் உங்கள் சுய அறிவு கொண்டு, பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்தறியுங்கள். கணக்கிலடங்காத காலங்களாக ஒன்று வழக்கத்தில் இருக்கின்றமை கொட்டு அதை நீங்கள், நல்லதென்று கொள்ளாதீர்கள். நேற்றையதினம் தான் தோற்றுவிக்கப்பட்ட படியால் அதைக் கெட்டதென்று தள்ளாதீர்கள். அநேகம்பேர் நம்புகிறார்கள் என்ற காரணத்தால் நீங்கள் ஒன்றை நம்பாதீர்கள். சில பேர்களே நம்புகிறார்கள் என்ற காரணத்தால் ஒன்றைத்தள்ளி விடாதீர்கள். உங்கள் அறிவுக்கும், திறனுக்கும் மதிப்புக்கொடுங்கள். நீங்கள் ஒவ்வொன்றையும் சிந்தித்து உங்கள் புத்திக்கு ஒத்துக்கொள்ளுமானால் ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லையேல் யார் சொன்னார்கள், எப்பொழுது சொன்னார்கள் என்பதைக் கவனியாது தள்ளி விடுங்கள்.

'சன்மார்க்கம்' என்ற வடமொழிக்குத் தமிழில் 'நல்வழி' என்று பொருள் கூறத்தகும். நல்வழி என்பதெது? நம்முடைய வாழ்க்கை-இன்பத்தோடு கூடிய வாழ்க்கைக்குத் துணை செய்வதெல்லாம் நல்வழியாகும். நம்முடைய வாழ்க்கைக்கு முரண்படுவதெல்லாம் தீயவழியாகும். நமக்கு நன்மை பயப்பன, நமது குடும்பத்தார்க்கும், உறவினர்களுக்கும், ஊரார்களுக்கும், தேசத்தார்களுக்கும், நன்மை பயப்பனவாகவிருக்க நன்மைவேண்டும். நமக்குநன்மைபயப்பதுபிறருக்குத் தீமை பயக்குமானால் அது நல்வழி யாகாது. உதாரணமாக திருடனுக்குத்திருட்டுத் தொழில் நன்மை பயப்பதால் அது நல்வழியெனப்படுமா? அவன் திருடுவதால் பிறர் துன்ப மெய்துகிறார்களன்றோ? ஆதலின் அது நல்லவழியல்லவென்று தள்ளுக. நல்லவழியென்பது நமது தேசத்தார் அனைவருக்கும் பட்சபாத மின்றி நன்மை பயப்பதாயிருத்தல் வேண்டும். அது நல்லவழியாகும். தீமை பயப்பன வெல்லாம் நல்வழியாகா.

'நன்மை' என்ற கோலால் உங்கள் வழியை அளந்து செல்லுங்கள். நான் நாள்தோறும் அநுசரித்துவரும் சில பழக்கவழக்கங்களை எடுத்துக் கூறுகிறேன். அவைகள் நல்லவையாயின் போற்றுக. இல்லையேல் அவைகளைத்தயங்காது தூற்றித் தள்ளுக. அப்போது தான் நீங்கள் 'நல்வழி' செல்பவர்கள் ஆவீர்கள்.

நம்மில் ஒருவன் உயர்ந்த ஜாதிக்காரன், மற்றவன் நம்மிலும்தாழ்ந்தவன் என்று அண்ணிவருகிறோம். இது நல்வழியாகுமா? கடவுள்மீது நம்பிக்கைபூண்டு, கடவுள் காருண்ய முள்ளவர் என்று கூறிக்கொண்டு, கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்று பேசிக்கொண்டிருக்கும் நீங்கள் அக்காருண்யக்கடவுள்-எங்கும் நிறைந்தகடவுள் ஒருவனைப்பிறவியில் உயர்ந்தவனாகவும், மற்றவனைத்தாழ்ந்தவனாகவும் பிறப்பிக்க முடியுமாவென்பதை ஆராய்ந்தறிந்து மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வில்லை எனக் கொள்வீர்களானால் அதுவே நல்வழியாகும்.

சாதிகள் பிறவிபற்றி நிற்பனவல்ல. தொழில்பற்றி நிற்பதாயின் அவ்விடத்திலும் நாம் வேற்றுமை பாராட்டுவதேன்? தொழில்கள் அன்புக்கு அணிகலமானவை. எப்படியொருவீட்டில் தகப்பன் ஒருதொழிலையும், தாயொரு தொழிலையும், மகன் ஒரு தொழிலையும், மகள் ஒரு தொழிலையும் பகிர்ந்து செய்யக் காண்கின்றோமோ, அப்படியே ஜனசமூகத்திலும் பலர், பல்வேறு தொழில்களைப் பகிர்ந்து செய்கின்றனர். தாய்செய் தொழிலும் தந்தை செய்தொழிலும், மகன் செய்தொழிலும், மகள் செய்தொழிலும் எப்படி அவர்கள் தம் வீட்டின்மீது பூண்டுள்ள அன்பையும், ஒருவர்மீதொருவர் பூண்டுள்ள அன்பையும் காட்டாநிற்கின்றனவோ, அப்படியே ஒவ்வொருவர் செய்யும் தொழிலும், அவரவர் அவ்வத்தொழிலின்மீது கொண்டுள்ள அன்பையும், ஜனசமூகத்தின்மீது கொண்டுள்ள அன்பையும் தாங்கி நிற்கின்றனவேயன்றி, வேற்றுமைக்கும் உயர்வு-தாழ்விற்கும் இடமேயில்லை. உங்கள் தெருக்களைச் சுத்தபண்ணுந் தொழிலை ஒருவன் ஏற்று நடத்தாவிட்டால் உங்கள் ஊர் நாற்றமெடுத்துவிடுமல்லவா? ஆதலால் உங்களையும் உங்கள் ஊரையும், நாற்றமெடுக்காமல் செய்யும் ஒரு தொழிலாளனுக்கு நீங்கள் அன்போடு வணக்கமாது செப்பாமல் இழிவுபடுத்தி வதைப்பீர்களானால் அது நல்வழியாகுமா?

நாம் அரும்பாடுபட்டுத் தேடிய பொருளை மூட்டை கட்டிக்கொண்டு போய் திருப்பதியிலும், ராமேசுரத்திலும், திருவண்ணாமலையிலும், உள்ள கோவில் அர்ச்சகன் காலில் காணிக்கையாக வைப்பதும், அவன் காலைக்கழுவிய தண்ணீரை நாம் குடிப்பதும், அவன் சற்றுந்தயங்காமல் வைப்பாட்டி மகன் என்று அர்த்தமுள்ள பெயரிட்டு நம்மை அழைப்பதும், அவன் நமது பணத்தால் தின்று கொழுத்து, தாசிவேசிகளுக்குக் கொடுத்து, மனமயங்கித் திரிகிறத்து அலைவதும், நாம் அதற்குக்கைம்மாறாக 'சூத்திரப் பட்டம்' தாங்கி நின்று வருவதும் "நல்வழி" யெனக் கருதுகிறீர்களா? நாம் செலுத்தும் பணத்தில் ஒரு சல்லிக்காசேனும் கடவுளைப் போய்ச் சேருகிறதா? அப்படியானால் நாம் கடவுளுக்குச் சொந்தமானதை யெல்லாம் கடவுளுக்கே தயங்காமல் கொடுக்கலாமே? அதுவன்றி நம்பணத்தால் ஒரு சாதியார் தின்று கொழுத்து, மேம்பட்டு நம்மைத்தாழ்த்தி அவமதிக்கச் செய்வது நமக்குச் சன்மார்க்கமாகுமா? வென்பதைச் சிந்தனை செய்யுங்கள்.

நம்முடைய நாட்டில் பிறந்த நல்லிளஞ் சகோதரிகளுக்குக் கடவுளின் பேரால் பொட்டுக் கட்டுவதும், அவர்களுக்குத் "தேவதாசிகள்" என்ற நற்பெயர் சூட்டி கடவுள் அர்ச்சகர்களுக்கும், பக்தர்களுக்கும் அவர்களை விபசாரிகளாகச்செய்து, நாட்டில் கற்புத்தன்மை குன்றச்செய்வதும், காமநோய்களும், மேகநோய்களும், பெருகச்செய்வதும், சன்மார்க்கமாகுமா? இன்றையதினம் சென்னையில் இருக்கும் விபசாரத்தைப் போக்கச் சிலர் செய்யும் முயற்சியில் பார்ப்பனர்கள் குறுக்கே வீழ்ந்து விபசாரத்தை ஆதரிப்பதை நீகள் நல்வழி யெனக் கருதுகிறீர்களா? இல்லையேல் நமது கற்பிளங்குமரிகளை தேவதாசிகளாக்காமல் ரட்சித்து, நமது கோவில்களைப் புனிதமாக்கப்பாடுபடுங்கள்.

கடவுளைப் பெருங்கடல் போலவும், நமது ஆத்மா அக்கடல் நீரின் சிறு துளி போலவும் ஒப்பிட்டு, நமது ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் அளவில்தான் வித்தியாசமுண்டு, குணத்தில் வித்தியாசமில்லையென்னும் வேதாந்திகளும், "அங்கமெலாங் குறைத்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங் கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகில் அவர் கண்டீர் யாம்வணங்குங் கடவுளாரே" என்று பாடிய பெரியாரைப் பின்பற்றும் அன்பே சிவமென்னும் சைவசமயிகளும், தீனரட்சகன், அனாதரட்சகன், எல்லாவுயிர்களிலும் பள்ளி கொண்டவன், எல்லாவுடல்களிலு மிலங்குபவன் என்று சமரசம் போதிக்கும் வைணவர்களும், நம்மில் சிலரை ஆலயவழிபாட்டிற்கு அநுமதியாமல் இருப்பது சன்மார்க்கமாகுமா?

தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் பறையர், சக்கிலியாகிய நமது மானிடகோடிகள், நமக்காக நாள்தோறும் வேலை செய்து, அந்திபகலாய் நமது பட்டி காத்து தங்கள் உயிரையும், உடலையும், கோத்தையும், நமக்கே தத்தம் பண்ணி, நம்மைக் கண்டமாத்திரத்தில் கைகூப்பி வணங்கி, அ

டியார்க்கடியாராய், அன்பருக்கன்பராய்த் துலங்க, நாம் அவர்கள் வயிறு நிறையக் குடிப்பதற்குப் போதுமான கஞ்சி கொடாமலும், அவர்கள் அழுக்குப்போகக் குளிப்பதற்குத் தண்ணீர் கொடாமலும், அவர்கள் பிள்ளைகள் படித்து முற்போக்கடைவதற்கு 'சாதியின்' பெயரால் அநுமதிக்காமலும் இழைத்துவரும் கொடுமைகளைச் சன்மார்க்கம் என்று கருதுகிறீர்களா?

நம்மை ஈன்றெடுத்து, அமுதூட்டி, தாலாட்டி, பேசவும், நடக்கவும், ஓடவும், பாடவும், ஆடவும், நாள்தோறும் பழக்கி, நமக்கு நல்வழிபோதித்து வளர்த்துவரும் தாய்மார்களுக்குப் போதிய கல்வி அறிவு கொடுக்காமலும், சமத்துவமான சுதந்திரம் அளிக்காமலும், சொத்துரிமை வழங்காமலும், அவர்களை நமது பண்ணையாட்களைப் போலப் பாவிப்பது தகுமா? 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் சொற்றொடரில் அன்னையை முன்பாக்வைத்து, தெய்வமாக நினைத்துத் தொழவேண்டும் என்று பள்ளியில் படித்த நாம், நமது அன்னைகளும், மனைவிகளும், தமக்கை தங்கைகளும், தற்காலம் தெய்வபதவியிலா வாழவைத்துள்ளோம்? என்பதைச் சிந்தித்து சன்மார்க்கநெறி பற்றிச் செல்வோமாக.

ஐந்துவயதுப் பெண்ணுக்கும் பத்துவயப் பையனுக்கும் மணமுடிப்பதும், அறுபதுவயதுக் கிழவனுக்குப் பத்துவயதுச் சிறுமியை மணப்பதும், நமது நல்லிளம் பெண்களின்மீது விதவைத்தன்மையைக் காலமெலாஞ்சுமத்தி, அவர்கள் கற்புக்கானி தேடி அவர்களைத் துன்பக்கடலில் ஆழ்த்தி வைத்திருப்பதும் சன்மார்க்கம் ஆகுமா?

ஆணாய்ப்பிறந்தவன் எத்தனை தாரமாகிலும் கொள்ளலாம். கட்டினதாரங்களை அடுக்கடுக்காக வீட்டினுள் வைத்துக்கொண்டு பரத்தையரோடு கூடிக்குலாவலாம். ஆனால் நம்மனைவிகள் தலையில் மட்டும் கற்பென்னும் கல்லைவைத்து ஆழ்த்திவருவதை நீங்கள் சன்மார்க்கம் என்று கருதுகிறீர்களா? கற்பெனப் படுவது இருதிறத்தாருக்கும் பொதுவெனக் கொள்வதை நீங்கள் ஆட்சேபிக்கிறீர்களா?

இவற்றையெல்லாம் நீங்கள் நிரயோசித்து, இவைகள் நல்வழிக்கு மாறுபட்டவைகள் என்றால் ஆண்மையோடும், தன்மதிப்போடும் போராடுங்கள். நீங்கள் உங்களைநேசிப்பதுபோலவே பிறரையும் நேசியுங்கள். உங்களுடைய அயலான் உங்களிடம் எவ்விதமாக நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அவ்விதமே நீங்களும் உங்கள் அயலாரோடு நடந்துகொள்ளுங்கள். அப்போது எம்மனிதனும் சன்மார்க்கத்தினின்றும் வழுவமுடியாது.

நீங்கள் பயத்துக்காக ஒன்றைச் செய்யாதீர்கள். கடவுளிடத்தும் பயங்கொள்ளாதீர்கள். பயங்கொண்டவன் ஒரு போதும் பரிசுத்தவான் ஆகமாட்டான். மோட்சத்தை விரும்பி ஒரு காரியம் செய்யாதீர்கள். நாகத்தை எண்ணி ஒருகாரியம் செய்வதைத் தவிர்க்காதீர்கள். ஏனெனில் அது சன்மார்க்கமாகாது. "பிறர் கண்டு கொள்வார்கள், கண்டுகொண்டால் தண்டிப்பார்கள்" என்பதை மனதில் கருதி ஒருவன் திருடும் தொழிலைக்கைவிடுவானாகில் அவன் ஒருபோதும் சன்மார்க்கனாகமாட்டான். சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கும் திருடனாகவே அவன் வாழ்ந்து வருவான். ஆனால் எவனொருவன் "திருடுவது கூடாது, அது தீய வழி, நம் பொருளை மற்றவன் களவாடுவதை நாம் ஒருப்படோம்" என்று மனந் தெளிந்து திருடாமல் இருக்கின்றானோ அவனே யோக்கியன் ஆவான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களென்றே நம்புகின்றேன்.

நீங்கள் ஆன்ம வளர்ச்சிக்குப் பாடுபடுவதோடு நில்லாமல் உங்கள் உடலையும் போற்றி வளர்க்குமாறு கோருகிறேன். நம்முடைய ஆன்மாவையும், மனத்தையும், அதன் எண்ணங்களையும், எழுச்சிகளையும், முயற்சிகளையும், அவற்றை ஈடேற்றிக்கொள்ளும் ஆற்றலையும் நம்முள் நாள்தோறும் பெருக்கிக் காப்பது நமது உடலேயாதலின், நாம் நம்து மனதை உறுதிப்படுத்துவதோடு நில்லாமல் உடலையும் பயிற்சித்து உறுதிப்படுத்துமாறு கோருகிறேன்.

சன்மார்க்க சீலர்களே! இன்று நீங்கள் இவ்வளவு பொறுமையோடு என் மொழிகளுக்குச் செவி சாய்த்தது பற்றி மகிழ்வெய்துகிறேன். என்கருத்துக்களை உங்கள் முன்னிலையில் எடுத்துக்கூறச்சந்தர்ப்பம் கொத்ததுபற்றி உங்களுக்கு வந்தனம் செலுத்துகிறேன். இன்றையதினம் மக்களைப்பாழ்படுத்தும் மூடக்கொள்கைகளையும், வீண்சடங்குகளையும், அர்த்தமற்ற புரோகிதக்கொடுமைகளையும், பஞ்சத்தாலும், பசியாலும், பிணியாலும், அறியாமையாலும், குற்றுயிரான இந்நாட்டு மக்களின் குறைகளைப் போக்க வழி தேடாமல், அறியாமைக்கும், புன்மார்க்கத்துக்கும் ஆஸ்பதமான உற்சவாதிகளுக்குச் செய்யப்படும் செலவுகளையும், சாதிக்கொடுமையால் சொந்தநாட்டில் வேற்றுமையோடு சத்ருக்களாய் வாழச்செய்யும் கொடிய கோட்பாடுகளையும், மக்களை மக்களாக வாழவிடாமல், அவர்களுக்குச் சாதாரண உரிமைகளையும்மறுத்துப், பாராமை, நெருங்காமை, தீண்டாமை ஆகிய கொடிய நோயால் பிடிக்கப்பட்டிருக்கும் வர்ணாசிரம அதர்மத்தையும் அறிவுச்சுடர் கொண்டெரித்து மக்களைச் சன்மார்க்கத் துறையில் செலுத்திவரும் எனது பிரிய நண்பர் ஈ. வெ. ராமசாமி அவர்களையும், அரிய நண்பர் ஜனக சங்கர கண்ணப்பர் அவர்களையும், பெரியநண்பர் கைவல்யம் அவர்களையும், அவர்களோடு கலந்துழைக்கும் பல்வேறு பெரியோர்களையும், இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்து அவர்களுக்கு எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

இன்று நிகழ்ச்சிக்குறிப்பில் கண்டுள்ள சன்மார்க்கசீலர்களான திருவாளர்கள் S. சஞ்சைய செட்டியார், E. V. துரைசாமி முதலியார், ஸ்ரீனிவாசன, சாது சச்சிதானந்தம், ஆகியவர்கள் உங்கள் காதுக்கும், மனதுக்கும், இன்பந்தருவகையில் 'கதர்' 'கல்வி' 'தீண்டாமை' 'காலமும்-சிலமும்' என்ற அரிய பொருள்பற்றி உபந்யசிப்பார்கள். பிற்பகலில் தலைமை வகிக்கும் திருவாளர் நஞ்சப்பா எனும் பெரியார் உங்களுக்கு நன்னெறி புகட்டுவார்கள். இவ்வரிய பெரிய சொற்பொழிவுகளைக் கேட்டு இன்பமுற உங்களோடு யானும் விழைகின்றேனாதலின் எனது மொழிகளை இத்துடன் விரைந்து முடித்துக் கொள்ளுகிறேன்.

'உங்கள் சங்கம் என்றும் நீடுழி வாழ்க'

"ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்"

## மதிப்புரை

### "வியாபாரி"

(வி. ரா)

மேனாடுகளில் நவ்வொரு துறையிலும் ஏராளமான பத்திரிகைகள்இருக்கின்றன. நமது நாட்டில் அரசியல் சமூகவியல் பற்றிய பத்திரிகைகள் தோன்றுவதும் அழிவதும் ஒரு சில நிலைத்திருப்பதுமாயிருக்கிறதேயொழிய வியாபாரம்முதலிய பொருளாதார வளர்ச்சிக் குழைக்கும் பத்திரிகைகள் இல்லை என்றே சொல்லலாம். இக்குறையை ஒருவாறு நீக்க திரு, கே. எஸ். சுந்தரம் அவர்களை கௌரவ ஆசிரியராகக் கொண்டு 'வியாபாரி' என்றுஒரு மாதப் பத்திரிகை தோன்றியிருக்கிறத. இதில் அயல் நாட்டு வியாபார முன்னேற்றம், வர்த்தகநிபுணர்களால்எழுதப்படும் அரிய கட்டுரைகள், மார்க்கட் ரிப்போர்ட், புதிய முறையில் வியாபாரத்தை நடத்தும் வழி முதலிய பல அரிய விஷயங்கள் வெளிவருமென்று தெரிகிறது. வருட சந்தா அணா எட்டு. வேண்டுவோர் அடியில்கண்ட விலாசத்துக்கு ஸ்டாம்பேனும் பணமேனும் அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—

என். எஸ். சுந்தரம்,
முத்தையாபிரஸ்,
மதராஸ். ஜி. டி.

### 'பாரதி'

திருவாளர் ஆர். நாராயணசாமி அவர்களை ஆசிரியராகக்கொண்டு உத்தமபாளையத்தினின்றும் வெளிவரும் "பாரதி" என்ற திங்கள் வெளியீட்டின் முதல் இரண்டு பத்திரிகைகள் வரப்பெற்றோம். இதில் தற்கால முன்னேற்றத்திற் கேற்ற விஷயங்கள் பல அறிஞர்களால் எழுதப்பட்டிருக்கின்றன.

உள் நாடு வருட சந்தா ரூ. 2—0—0
வெளி நாடு ,, ,, 2—8—0

பொறுப்பாளர்
'பாரதி' ஆலயம்
உத்தமபாளையம் மதுரை ஜில்லா

### ஆப்கன் சரித்திரம்

தற்காலம் ஆப்கானிஸ்தானத்தின் கலவரம் உலகத்தின் கவனத்தையே இழுத்து நிற்கின்றது. இந்த நாட்டின் முற்கால தற்கால நிலைமையை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி எம். கே. நாராயணசாமி தினகரன் அவர்களால் 150 பக்கங்கள் கொண்ட ஒரு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1—0—0

விலாசம்—

"சுதந்தரன்" காரியாலயம்
242—36 கல்சிரயில்வே பிளாக்
ரங்கூன்.

## கொல்லங்கோடு
## செங்குந்த வாலிபர்சங்கம்

மலையாளம் ஜில்லாவைச்சேர்ந்த கொல்லங்கோட்டில், செங்குந்த சமூகத்தை சீர்திருத்துவதற்காக் கிளம்பியுள்ள வாலிபர்களின்நன் முயற்சியால், தமிழ் புது வருஷ கொண்டாட்டத்தை முன்னிட்டு, செங்குந்த வாலிபர் சங்கத்தின் ஆதரவின் கீழ், மூன்று பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன.

முதல்நாள் கூட்டம் திரு. மு. பழனிமலை முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. சு. சொக்கலிங்க முதலியார் சீர்திருத்தம் என்னும் விஷயத்தைப்பற்றியும் திரு. ப. முத்து வேலு முதலியார் அவர்கள் புலாலுண்ணல் பலியிடுதல் என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இரண்டாவது நாள் கூட்டம் வே. பழனியப்பமுதலியார் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. ப. முத்து வேலு முதலியார் கொல்லாமை என்பது பற்றியும் ஈரோட்டில் செங்குந்த வாலிபர் மகாநாட்டை திறந்து வைத்த திரு. கு. முத்துக்குமார சுவாமி முதலியார் அவர்கள் 'சீர்திருத்தம்' என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மூன்றாவது நாள் கூட்டம் பழனிமலை முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அது சமயம் திரு. சொக்கலிங்கமுதலியார், 'தொழில் அபிவிருத்தி' என்னும் விஷயத்தைப்பற்றியும் திரு. சு. சிவராமமுதலியார் 'செங்குந்த வாலிபர் சங்கம்' என்பது பற்றியும் பிரசங்கித்தார்கள் என்று காரியதரிசி திரு. எஸ். சொக்கலிங்க முதலியார் அறிவிக்கிறார்.

## சேலம்குகை முனிசிபல்சித்தவைத்தியசாலை 2 வது ஆண்டு நிறைவுவிழா.

இவ்விழா 9—4—29-ல் சேலம் ஜில்லா கலெக்டர் கனம் கான்பகதூர் கரிமுல்லாபருக்கி சாயபு பி. ஏ. அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் முனிசிபல் கௌன்சிலர்கள், சட்டசபை மெம்பர்கள், உத்தியோகஸ்தர்கள், பிரமுகர்கள் யாவரும் விஜயம் செய்தனர். டாக்டர் மீனாட்சிசுந்தரம், ரகுநாத செட்டியார், ஆர். எம். லோகநாத முதலியார், பி. ஏ. பி. எல். திரு. ஆரோக்கியசாமி செட்டியார் ஆகியவர்கள் "சுதேச வைத்தியம்" என்பதைப் பற்றிப் பிரசங்கித்தார்கள். பிறகு டாக்டர் மீனாட்சிசுந்திரம் ஏ. எம். ஏ. சி. அவர்களின் சாமார்த்திய சிகிச்சைகளைப் பாராட்டி குகை திரு. நாகய்ய செட்டியார் அவர்களால் கொடுக்கப்பட்ட பொற்பதக்கம் அவருக்குப் பரிசளிக்கப்பட்டதென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

கள் இம்மையில் ஒழுக்கத்தோடு வாழ முயலுங்கள். ஒழுக்கம் உயரினும் பெரிது என்பதை பறை சாற்றுங்கள். உங்கள் வயிற்றுக்கு சோறும் இடுப்புக்கு ஆடையும், நிழலுக்கு வீடும், தேடி அடைந்து ஆனந்தமடையுங்கள். அதற்கெதிராக வுள்ளதெது வாகிலும்—கடவுளாகிலும்—உடைத்தெறியுங்கள். நீங்கள் தாங்கமுடியாத துயரங்களைச் சுமந்து திரிகிறீர்கள், இதைவிட அதிகமான துயரங்களை மறுமையில் உள்ளதாகக் கூறப்படும் நரகத்திலும் காணமுடியாது. ஆதலால் மறுமையைப்பற்றிச் சிந்திக்காமல் இம்மையில் போராடி வெற்றி கூறுங்கள்.

## பார்ப்பனீயம் ஒழிந்த பிற்கடன்

சி. புதூர், மணியம் முத்துக்கவுண்டாவர்களின் பதினாறும்நாளின் (பிற்கடன்) விழாவை முன்னிட்டு 17-4-29 ல் திரு. ப. கி. இராமசுவாமி அவர்கள் நிலையத்தில் ஓர் அனுதாபக்கூட்டம் கூடியது. சுவாமி சிவநேசம் அவர்கள் தந்தையாருக்கு சுவாமிகள் கருத்துக்கிணங்க, சடங்கு முதலிய போலிக்கிரியைகள் ஒன்றுஞ் செய்விக்கப்படாமல், பார்ப்பனீயம் ஒழிந்த பிற்கடன் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

## பெண் தேவை.

சைவவேளாள குலத்திலுதித்தவரும் தமிழ், மலையாளம், இங்கிலீஷ் இம் மூன்றும் பயின்றவரும் 27-பிராயமுடையவருமான ஒருவருக்கு 20-வயதிற்குட்பட்ட ஒரு பெண் தேவை. பெண்ணின் கல்வி, ஜாதி இவைகளைப்பற்றி அவசியமில்லை. மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

Y. Z.,
C/o
"குடி அரசு" ஈரோடு.

## நன்கொடைகள்.

அடியிற்கண்ட கனவான்கள் தங்கள் தங்கள் இல்லங்களில் சுயமரியாதை முறைப்படி நிகழ்த்திய விசேஷ நிகழ்ச்சிகட்காக நமது "குடி அரசு"க்கு நன் கொடை அனுப்பியுள்ளார்கள். அவர்கட்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம். (ப-ர்.)

| திருவாளர்கள், | ரூ—அ—பை. |
|---|---|
| வாணியம்பாடி வெ. சண்முக முதலியார் | 5—0—0 |
| நாகை ஏ லட்சுமணபிள்ளை | ,, 5—0—0 |
| F. M. S. பிராந்தியின் தீக்கி கி.மு. | |
| சின்னண்ணன் பெரியமண்டர் | ,, 2—0—0 |
| மாயவரம் டி. சின்னையா | ,, 1—0—0 |
| கோவில்பத்து டி. எம். கல்லாக் கண்ணு | ,, 1—0—0 |
| சதுர்வேதமங்கலம் பழனியாண்டி | ,, 1—0—0 |
| கல்லிடைக்குறிச்சி காசி விஸ்வநாத ஆச்சாரி | ,, 1—0—0 |
| சூரக்குடி வெள்ளைய நாடார் | ,, 1—0—0 |
| கோவை சி. கே. சுப்பிரமணியம் | ,, 1—0—0 |

எவ்வுயிர்க்கும் அன்பாயிரு.
ஆனால் அடிமையாயிராதே.


## A. N. காதர் அவுலியா பரிமளசாலை.

வாசனை சாமான்கள் விபரம்

கலவைச்சந்தனம், பாக்குத்தூள், சந்தனதித்தைலம், சிவகிரி புகையிலை, தாம்பூல மாத்திரை, சந்தன வில்லை, கூந்தல் தைலம், சாந்து டப்பி, அரகஜா, ஸ்நானப் பவுடர், கேசர் பவுடர், புனுகு, ஜவ்வாது, பொன்னாங்கனிதைலம், கஸ்தூரி தந்தப் பவுடர், பலதினுசு அத்தர் வகையறாக்கள், தசாங்கம், ஆனந்த பவுடர், ஊதுபத்தி வகையறாக்கள், வீரிய விர்த்தி சிட்டுக்குருவி லேகியம், வஸ்திர வாசனைக்கவர், ஆனந்தஞ்சனம், அஷ்டாசம், தேள்விஷ மூலிகை திராவகம் யாவும எங்களிடம் விலை சாசமாய் கிடைக்கும்.

தங்கள் விலாசம் தெரிவித்தால் மேற்கண்ட வாசனை சாமான்களின் முழு விபரமடங்கிய கேட்லாக்கு இனாமாகவே அனுப்புவோம்.


எங்கள் விலாசம்:—

A. N. காதர் அவுலியா பரிமளசாலை,
வலங்கைமான் (தஞ்சை ஜில்லா).

குறிப்பு:—எங்கள் பரிமளசாலைக்கு (ஆண்டவன் பிரஸ்) என்று நாமம்சூட்டி அச்சுக்கூடம ஏற்படுத்தி இருக்கிறோம். வெளியூர் அச்சுவேலைகள் குறித்த காலத்தில் அச்சிட்டு கொடுக்கப்படும்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA.



ரொம்பவும் குறைந்த விலை ரூபா 2—15—0.

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. இந்த காமிராவை வாங்கி அநேகர் நூறுகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமானகளு—ம் அனுப்பப்படும், சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபாய் 2—15—0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

காண்டியன் வாட்சு பீபிள், ஜி. டி, மதராஸ்,

(3-மபக்கத் தொடர்ச்சி)

ர்டு கோஷன் அவர்களை திரு. கலியாணசுந்தர முதலியார் கூப்பிட்டால் மூடநம்பிக்கையும் குருட்டுச்சட்டமுமுடைய பாண்டியனைப் போல் லார்டுகோஷனுடைய ராஜாங்கத்தில் இடமில்லை. பாண்டியனுடைய சுரம் தீர்த்த வைத்தியரும் குருவுமான ஞானசம்பந்தருடைய சமயத்திற்கு விரோதம் செய்த சமணர்கள் எண்ணாயிரம் பேரையும் ஞானசம்பந்தரின் கடாட்சத்தால் கழுவில்போட்ட பாண்டியனைப்போல மகமதிய ராஜாக்களோ இங்கிலீஷ் ராஜாங்கமோ இல்லை. ஞானசம்பந்தர் நினைத்தது போல, இப்பொழுது, நமது ராஜாவுக்குத் தீராப்பிணியைத் தீர்த்த வைத்தியரும் பாதிரியாரும் நினைத்தாலும் எந்த மதஸ்தரையும் கழுவில் போட இங்கிலீஷ் சட்ட நீதியிவிடமில்லை. தாம் வளர்ந்து பிறரும் வளரவேண்டு மென்னும் தன்மை அவர்களிடமிருப்பதால் அவர்களிடம் அரசாங்கமுமிருக்கிறது. திரு. கலியாணசுந்திர முதலியார் தம்மை ஞானசம்பந்தராக நினைத்துக்கொண்டு லார்டுகோஷனைப் பாண்டியனாக நினைத்துக் கூப்பிடுவதில் என்ன பிரயோஜனம்? இவர்கள் கையில் சுயராஜ்ஜியத்தைக் கொடுத்து விட்டு இங்கிலீஷ் கவர்ன்மெண்டு போய்விட்டால் நமது நடராஜப்பிரபுவும் அவருடைய எஜமான்களானதில்லை மூவாயிரம் தீக்ஷதர்களும் குடியிருந்த வெள்ளியங்கிரிக்கு அப்பாலுள்ள ஆப்கானிஸ்தானம், பாரசீகம், ரஷ்ஷியா முதலிய தேசங்களிலிருக்கிற தீக்ஷதர்கள் வந்து நமது இடங்களிலெல்லாம் குடிபுகுந்து கொண்டால் சைவமகாநாடும் வருணாச்ரம மகாநாடும் வைகுண்டத்திலாபூமிபட்டா செய்திருக்கின்றன.

விஷயம் நீண்டுவிட்டதென்று படிக்க மயங்காதீர்கள். விஷயம் பெரியது. லார்டுகோஷனையும் அவர் கவர்ன்மெண்டையும் கூப்பிடும்படியான கொடுமையை நாங்களென்ன செய்து விட்டோம்? சமயவாதிகளும் பண்டிதர்களும் நாங்கள் சாஸ்திரத்திற்கும் கடவுள் சம்மதத்திற்கும் ஒத்துக்கொள்ளாததைச் சொல்லுகிறோம் என்று எடுத்துக்காட்டட்டும். இனி பெரியபுராணத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

மதுரை நாடார் மகாநாட்டில் பெரியபுராணம் சீர்திருத்தவந்த நூல் என்று சொன்னார். பெரியபுராணம் பரவின இடங்களில்தான் சைவ அபிநயக் கொடுமைகள் அதிகமாக விருக்கின்றன. பெரியபுராணம் படித்த சில பண்டிதர்கள், முன் எப்படி யிருந்தாலும் இப்பொழுது மற்றவர்களைத்தொடவும் மற்றவர்கள் வீட்டில் உடனிருந்து சாப்பிடவும் பயப்படுகிறார்கள். சிலர் நாங்கள் தீக்ஷைபெற்றப் பழையசைவர்கள் என்று திரையின் மறைவிலிருந்து யாரும் பார்க்காமல் சாப்பிடுகிறார்கள். திரைக்குள் ஒளிந்தாலும் வேளாளனும் சூத்திரன்தானே. சூத்திரனென்றால் தாசிமகன் அடிமை, ஆசாரமில்லாதவன், கண்டதைப் புசிப்போன் என்றுதானே ஸ்மிருதி இதிகாசங்களில் அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. வேளாளன் சூத்திரன் என்பதற்கு பார்ப்பாருடைய ஸ்மிருதிகளிலிருந்தெடுத்து காலிலும் கையிலும் மாட்டிக்கொண்ட விலங்கு ஒருபுறமிருக்கட்டும், பெரியபுராணமென்றால் உயிரை விடும் சில சைவப்பண்டிதர்கள் சொல்லும் ஆசாரச் சீர்திருத்த நூலான பெரியபுராணத்திலும் வேளாளரைச்சூத்திரரென்றே சொல்லியிருப்பதற்கு கீழ்க்கண்ட பாட்டே போதும்.

"அம்பர் நீடிய அம்ப லத்தினி லாடு வாரடி சூடுவார்தம்பி ரானடி மைத்தி றத்துயர் சார்பின்
மேன்மைத் திறத்துளார், நம்பு வாய்மையில் நீடு சூத்திர நற்குலம்செய்த தவத்தினால், இம்
பர் ஞாலம் விளக்கி னாரிளை யான் குடிப் பதி
[மாறனார்"

இந்தப் பெரியபுராணப் பாட்டினால்இளையான் குடி மாறனார் என்கிற வேளாளர் சீர்திருத்தமடைந்திருக்கலாம். இதைப்படித்த பழக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு திரு. கலியாணசுந்திர முதலியார், விஜயபுர மகாநாட்டில் சிலர் சீர்திருத்த மென்று கடவுள் உண்மைக்கே மறுப்பு கூறுகிறார்கள், அது உண்மைச் சீர்திருத்தமாகாது, உண்மைச் சீர்திருத்தமென்பது மனிதன் செம்மைப்படுவதாகும். மனிதனுள்ளம் ஐம்பெரும் பாவங்கட்கு இடந்தரும் வரை அவன் சீர்திருத்தம் பெறல் அரிது என்று சொன்னார். மற்ற சைவ வேளாளர்களை எல்லாம் பெரிய புராணமே சூத்திரனாக்கி யிருக்கிறது என்பதை இவர் அறியாரா?

திருஞான சம்பந்தர் பாடியிருக்கும் பலபாடல்களில் சிவபெருமான் பார்ப்பானாக இருக்கிறார் என்றே பாடியிருக்கிறார்.

"அங்கமோராறும்...பரங்குன்றே" என்னும் பாட்டில் முன் இரண்டடியில் ஆரியமதக் கிரந்தங்களைச் சொல்லி அவற்றை உண்டு பண்ணின கடவுள் பார்ப்பார ஜாதி யென்று காட்டி தென்னாட்டினை ஏமாற்ற இரண்டடியில் திருப்பரங்குன்றத்தைப் பாடிவிட்டாரே. "வெந்த வெண்ணீறு அணிந்து விரிநூல் திகழ் மார்பில்" என்னும் அடியையும் பாருங்கள். வெண்ணீற்றைச் சைவர்கட்குக் காட்டி மார்பில் விரிநூலிருக்கும் பார்ப்பான் தான் சாமி என்றும் காட்டிவிட்டாரே. இந்த விதமாக எத்தனையோ பாட்டுகள் வேத வேள்வியை நிந்தித்த சமணர்களை கழுவில் போட்டதாகச் சொல்லுகின்றன. வேதமும் வேள்வியும் சைவர்களுக்குரியவையா?

## பார்ப்பனீயம் ஒழிந்த இறுதிச்சடங்கு.

இராமநாதபுரம் ஜில்லா கரிசப்பட்டியில் எனது மைத்துனன் அய்யாக்கண்ணுவின் இறுதிச் சடங்கு விபவ ஆண்டு பங்குனித் திங்கள் 20-ம் நாள் பார்ப்பனப்புரோகிதமோ பார்ப்பனரல்லாதார் நிகழ்த்தும் வைதிக சம்பிரதாயமோ ஒன்றுமின்றி வெகுசிறப்பாக நடைபெற்றது. இதில் பஞ்சாங்கப்பார்ப்பனன் எவ்வளவோ சூழ்ச்சி செய்தும் ஒன்றும் பலிக்கவில்லை என்று சிங்கம்புணரி கரு. பெரி. பெரியையா அறிவிக்கிறார்.

## சாதிப் பட்டத்தையும் சமயக்குறிகளையும் துறந்தவர்கள்:—

திருவாளர்கள்.

கரு. பெரி. பெரியையா
சிங்கம்புணரி

ஆர். ஏ. மணவாளன்.
ட்ராம்வே கண்டக்டர்
சென்னை.

எஸ். எம். பரமன்
தெற்குத்தெரு
சோழவந்தான்.

ஆர். எம். சாமி.
புதுப்பேட்டைத் தெரு
பாளையங்கோட்டை.

ஈப்போ F. M. S.

ரா. பெருமாள் அ. கணபதி பெ. வெங்கிடாசலம் பெ. மாணிக்கம் பொ. ரெத்தினம் க. ராசலிங்கம் பொ. கணபதி பி. சின்னதம்பி பெ. வீராசாமி ரா. ராமலிங்கம்.


குறைந்த சந்தா! நிறைந்த விஷயம்!!

# "ஆனந்தபோதினி"

## ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை.

"ஆனந்த போதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை மிகுதிப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டு கோளின் மேல் மாதசஞ்சிகையொடு "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும் புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மத சமூக தேசிய முன்னேற்றத்தைப் பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைச் கொட்டிக் குவிக்கக கங்கணங்கட்டியிருக்கின்றனர்.

உங்களுக்கு என்ன வேண்டும்.

| | |
|---|---|
| மத உண்மைகளா? | கிராமச் சீர்திருத்தங்களா? |
| தத்துவ ஆராய்ச்சிகளா? | சமூக இயல்களா? |
| கைத்தொழில் விளக்கங்களா? | வைத்திய விசேஷங்களா? |
| வியாபார ரகசியங்களா? | தேசீய தத்துவங்களா? |
| விஞ்ஞான (Science) விநோதங்களா? | சிறுகதைப் பகுதிகளா? |
| | இன்னிசைப் பாட்டுகளா? |

எல்லாவற்றிற்கும் "ஆனந்த போதினி" வாரப்பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருட சந்தா ரூ 3. 6 மாத சந்தா ரூ 1—12—0

பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூ 4.

ஆனந்தபோதினி ஆபீஸ்

தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்

வேதப்புரட்டை வெளியாக்கும்

## "ஞான சூரியன்" இரண்டாம் பதிப்பு

வெளிவந்து விட்டது.

முன் விலை ரூபாய் 1. இப்போதைய விலை அணா 0—8—0

ஒரே தடவையில் ஐந்து புத்தகம் வாங்குவோருக்கு தபால் சார்ஜ் இனாம். ஒரு புத்தகம் வேண்டுவோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவும். V. P. மூலம் அனுப்பினால் 14-அணா ஆகிறது.

திரு. சந்திரசேகரப்பாவலரால் எழுதப்பட்ட இராமாயணத்தின் ஆபாசம்
பாலகாண்டம் விலை அணா 0—4—0

சுயமரியாதைப்பாடல்கள் விலை அணா 0—2—0

விலாசம்:— மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு.





## இழந்தபலத்தைத் திரும்பக் கொடுக்கும்

பழநி, சி. எம். சாமி

## மன்மத கோலாகல குளிகை

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழப்பட்டது. தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. இதற்கு நிகரான ஔஷதமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திருப்பவரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாதுபுஷ்டி இவற்றை தரவல்லது. எவ்வித பலஹீனம், தாதுநஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே இதனருங்குணம் விளங்கும். 120-குளிகைக்கு ரூ. 10. 60-குளிகை ரூ. 5. 30-குளிகை ரூ. 3. வி. பி. சார்ஜ் வேறு.

## குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு:

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ. 16.

நற்சாக்ஷி:—என் தாயாருக்கு ஏற்பட்ட இருமல், இளைப்பு, கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகளினால் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது தங்கள் குருதாளக பஸ்பம் கொடுத்ததில் பூரண குணமாயிற்று.

19—10—28 P. N. பழனிச்சாமி பிள்ளை,
நாட்டுமருந்து லைசென்ஸ்தார் அண்டுமிராசுதார், பழநி.

## அசல் வெள்ளி பஸ்பம்

நாள் பட்ட வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீரோடு விந்து விழுதல் பவுத்திரம், நீரடைப்பு, வயிற்றுவலி, காசம் முதலிய சகல மேகமும் தீரும். தாது புஷ்டி உண்டாகும் 1-மண்டலம் பஸ்பம் ரூ. 15—0—0.

**கெற்ப எண்ணெய்.** இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்தர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை, இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெற்பமுண்டாகும். மிக்க அனுபவமானது. புட்டி 1-க்கு ரூ. 2—0—0.

பினாங்கு முதலிய அன்னிய தேச வாசிகள்ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்

சித்த ஆயுள்வேத ஆசிரியர்

C. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி, S.



ரூ. 2—14—0 ரூ. 2—14—0

## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ. 2-14-0.

கனடியன் வாட்சு பீபிள்,
ஸோல் ஏஜண்ட்ஸ்,
(4-d) ஜார்ஜ் டவுன், மதராஸ்.



## மதனகாமேஸ்வர லேகியம்.

அதிக சொற்பன வெளியீடுகளை நிவர்த்தித்து நீர்த்துப்போன ... குறைந்துபோன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி ... ர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி ஜனனேந்திரியக்கருவிகளைப்பலப்படுத்துவதில் நிகரற்றது. சேர் 1 க்கு விலை ரூபாய் 3. வி. பி. வேறு

## பஞ்ச தீபாக்கினி லேகியம்.

அஜீரணம், ... வயிற்றுப்பொருமல், குன்மம், வாயு முதலிய இரப்பை சம்பந்தமான சகலரோகங்களையும் நிவர்த்திக்கும் சேர் 1 க்கு விலை ரூபா 1-8-0 வி. பி. வேறு. அன்னிய நாட்டார்முன்பணம்அனுப்பவேண்டும்.

சித்த வைத்தியசாலை,
ஆனந்த நிலையம், திருச்செங்கோடு. S. I.



அதிர்ஷ்டம்! அதிர்ஷ்டம்!

சாலியர் மகாஜன சங்கம் க்ஷேமநிதி லாட்டரி.

சீட்டு 1க்கு ரூ. 1.

22 சீட்டுள்ள புக் 1-க்கு ரூ. 20

## முதல் பிரைஸ் ரூ. 1000.

2வது பிரைஸ் ரூ. 500. 3வது பிரைஸ் ரூ. 250 மற்றும் பல சில்லரை பிரைஸ்களும் உண்டு.

2 புக் விற்பவர்களுக்கு தனிப்பிரைஸ் டிக்கட் 1

பிரைஸ் எடுக்கும் தேதி சுக்லஹு வைகாசி-மீ 24-உ. (6—6—29)

ஷை தேதியில் கண்டிப்பாய் பிரைஸ் எடுக்கக்கூடும். புஸ்தகம் விற்றவர்கள் சீக்கிரம் அனுப்பிவைக்கவும். கொஞ்சம் புத்தகங்களே மீதியிருப்பதால் தேவைக்கு எழுதவும்.

தகுந்த கமிஷன் தக்க லாபம்.

விலாசம்:—

உ. அ. சுந்தரமகாலிங்கம்,
K. P. K. சுப்பிரமணியம்.
காரியதரிசிகள்.
சாலியர் மகாஜன சங்கம் க்ஷேம நிதி லாட்டரிக் கமிட்டி,
அருப்புக்கோட்டை, (இராமநாதபுரம் ஜில்லா.)

## "பாரதி"

இஃது

தேசாபிமானம் பாஷாபிமானம் அரசியல் ஜன நிர்மாணம் ஆசார சீர்திருத்தம் சமூகத் தொண்டு விவசாயம் கைத்தொழில் வியாபாரம் பொருளாதாரம் ஜீவியசரித்திரம் தேசசரித்திரம் கிராம நிர்மாணம் தீண்டாமை விலக்கு மதுவிலக்கு மாதர் விடுதலை கதர் இயக்கம் வாலிபர் இயக்கம் மாதர் இயக்கம் சாரணர் இயக்கம் புஸ்தகாலய இயக்கம் ஐக்கிய இயக்கியம் தொழிலாளர் இயக்கம் சன்மார்க்க இயக்கம் அயல்நாடுகளில் நம்மவர் பொதுஜனக்கல்வி கலைவளர்ச்சி குழந்தைவளர்ப்பு தேகப்பயிற்சி சுகாதாரம் பத்திரிகைத்தொழில் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு ஆகிய விஷயங்களுடன் வெளிவரப்போகும் ஓர் உயர்தர தமிழ்மாதப் பத்திரிகை.

தமிழ் நாட்டுச் சகோதரர்களே! இத்தனைச் சிறப்புடன் உதயமாகும் "பாரதி"யை அதிகமாயும் அன்புடனும் ஆதரிக்க வேண்டியது தமிழ்ச்சகோதர சகோதரிகளின் தலைக்கடமையாகும். உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய விரும்பினால், "பாரதி"யில் விளம்பரம் செய்யுங்கள்.

இதன் ஆசிரியர், தேவாரம் ரா. நாராயணசாமி

சந்தா விபரம்.

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-0-0.
வெளிநாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. 2-8-0,
அல்லது 4 ஷிலிங்

விலாசம்:—மானேஜர்,
"பாரதி" உத்தம பாளையம்,
மதுரை ஜில்லா.

(8)

## ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்; நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்,
டெலிபோன் 3311-
(4-e) தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கெடியாரம் விலை ரூ 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜீனன் வாட்சு கம்பெனி,
(4-f) விண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

## நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்தனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரலில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும், நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீடனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1 க்கு விலை ரூ. 1—4—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன்பணம் ரூ, 2—8—0 அனுப்பவேண்டும்.

புரோப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
(18) அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் ரிப்பேர் செய்யவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்,
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
(16) மைலாப்பூர், மதறாஸ்

## திருப்பூர் கதர் & பனியன்ஸ்.

உங்களுக்கு எதுவேண்டும்!

கதர் வேண்டுமா! பனியன்கள் வேண்டுமா!!

எதுவேண்டுமானாலும்

## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரியில்

தயார் செய்யப்படுகிறது.

விலை தபால் பாக்கிங் சார்ஜ் உள்பட

| உள் நாடு | | வெளி நாடு | |
|---|---|---|---|
| 32 இஞ்சு பனியன் டஜன் 1-க்கு | 5—8—0. | 32 இஞ்சு டஜன் ஒன்றுக்கு | 6—8—0, |
| ,, அரை டஜன் | 2—14—0. | ,, 2 டஜன்கள் | 12—0—0. |
| ,, கால் டஜன் | 1—8—0. | ,, 3 டஜன்கள் | 17—8—0, |

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு ஆர்டர் செய்யவும். வெளிநாடு ஆசாமிகள் பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும். கதர் ஜவுளி தினுசுகளின் விலை விபர ஜாபிதாவுக்கும் எழுதுங்கள். விலை சரசம்.

கதர். கருப்பண்ணன்,
**Khaddar. Karuppanan,**
(7) Sole Agent, TIRUPUR. (S. India)

## "முன்னேற்றம்."

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அறிவுத்தடைகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி
வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.
விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
(f) 152, சிலிகிரோட், சிங்கப்பூர்.

ஸ்ரீமதி நாகம்மாள் அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.